Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



சாறிகள், பட்டு வேட்டிகள்,
கூறை சாறிகள் மற்றும்
ரெடிமேட் ஆடைகள், பல்வேறு
துணி வகைகள், பிளவுஸ்
துணி வகைகள் யாவற்றுக்கும்
வருகை தாருங்கள்



சிவகணேசன் ரெக்ஸ் ரைல்ஸ்

41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(சி-2014)

T.P NO:
222 2063

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 10 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 01 (24.01.2004) சனிக்கிழமை இதழ் :115

## தென்பகுதி அரசியல் சூழல், நிலைப்பாடுகள்

# சர்வதேச சமூகத்திடம் முன்வைக்க

# விடுதலைப் புலிகள் நடவடிக்கை!

## இவ்வாரம் பயணமாவதாக தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**தென்னிலங்கை அரசியல் நெருக்கடி நிலையை மிகவும் எச்சரிக்கையுடன் அவதானித்து வரும் நாம் - இது குறித்தும், எமது நிலைப்பாடுகள் குறித்தும் - தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் தொடர்பாகவும் சர்வதேச சமூகத்திற்குத் தெரியப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.**

**இதற்காக இந்த வார இறுதியில் வெளிநாடுகளுக்கான சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டு வெளிவிவகார அமைச்சர்களையும், முக்கிய பிரமுகர்களையும் சந்திக்கத் திட்டமிட்டிருப்பதாக அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

நேற்று கிளிநொச்சியில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அவர்,

நாங்கள் யுத்தநிறுத்த உடன்பாட்டை நடைமுறைப்படுத்துவதில் அர்ப்பணிப்போடு இருக்கிறோம். விசுவாசமாகவும் இருக்கிறோம். அமைதி வழியில் நாகரிகமான முறையில் பேசி எமது மக்களின் அரசியல் எதிர்பார்ப்புக்களை, அரசியல் அபிலாசைகளை அடைவதற்கு நாங்கள் நிச்சயமாக முயல்வதில் மிகவும் உறுதிப்பாடாக இருக்கிறோம்.

ஆனால், தென்னிலங்கை அரசியல் சூழல் இதற்கான வாய்ப்புக்களை, இதற்கான நம்பிக்கைகளை சீர்குலைத்து வருவதை இங்கு சுட்டிக்காட்டமுடியும். சர்வதேசத்தின் அனுசரணையோடு உருவாக்கப்பட்ட இந்தச் சமாதான சூழ்நிலைகளைக் கூட தென்னிலங்கை அரசியல் சக்திகள் சீர்குலைக்கும் அளவுக்குத் துணிந்துவிட்டார்கள்.

அந்தவகையில் நாங்கள் எங்களது உரிமைகளைப் பெறுவதற்கு எங்களால் கட்டியெழுப்பப்பட்ட விடுதலைக்கான முயற்சிகள், எமது மக்களின் உரிமைப் போராட்டத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சந்திரிகாவுடன் அகாஷி நேற்று சந்திப்பு!

(கொழும்பு)

ஜப்பானிய விசேட தூதுவர் யசுசி அகாஷி ஜனாதிபதி சந்திகா குமாரதுங்கலை ஜனாதிபதி மாளிகையில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் சமாதானப் பேச்சுவார்த்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வனுடன் சந்திரசேகரன் பேச்சு!

(கிளிநொச்சி)

தமிழீழ அரசயற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை மலையக மக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் நேற்று சந்தித்து பேச்சு நடத்தினார்.

விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நேற்றுக் காலை இந்தச் சந்திப்பு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய கடற்படை தலைமை தளபதி அடுத்த மாதம் கொழும்பு வருகிறார்!

(புதுடெல்கி)



இந்திய கடற்படையின் தலைமை தளபதி அட்மிரல் மாதவேந்திர சிங் அடுத்த மாத முற்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது அட்மிரல் மாதவேந்திர சிங் நான்கு நாட்கள் இலங்கையில் தங்கியிருப்பார் என்று இந்தியக் கடற்படைத் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

அட்மிரல் மாதவேந்திர சிங்குடன் இந்திய கடற்படையின் உயர்மட்ட அதிகாரிகள் சிலரும் கொழும்பு வரவுள்ளனர்.

இவர்கள் இங்கு தங்கியிருக்கும்போது, திருகோணமலை உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள கடற்படைத் தளங்களுக்கு விஜயம் செய்வர் என இலங்கைக் கடற்படைத் தலைமையக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சந்திரிகா

## இரண்டு பதவிக் காலங்களுக்காக மூன்று முறை சத்தியப் பிரமாணமா?

### உயர்நீதிமன்றிடம் விளக்கம் கோரி மனுத் தாக்கல்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இரண்டு பதவிக்காலங்களுக்காக மூன்று முறை சத்தியப் பிரமாணம் செய்தமை தொடர்பான நிலையைத் தெளிவுபடுத்துமாறு கோரி, உயர்நீதிமன்றில் நேற்று மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

சட்டத்தரணி பி.தர்மதாஸ என்பவரால் தாக்கல்செய்யப்பட்ட இந்த மனுவில் சட்டமா அதிபர் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

அந்த மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கல்வயலில் மீட்கப்பட்ட சடலம் அடையாளம் காணப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் - கல்வயல் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்ட இளைஞனின் சடலம் அடையாளம் காணப்பட்டது.

நல்லூர் - செம்மணி வீதியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் வினோதன் (வயது 21) என்ற சாரதயின் சடலமே துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்டதாக அவரது பெற்றோர் இனங்காட்டினர்.

கடந்த 10 ஆம் திகதி கல்வயல் ஐயனார் கோயிலுக்கு சமீபமாக துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் ஒரு சடலம் மீட்கப்பட்டிருந்தது.

இறந்தவரின் சடலம் அடையாளம் காணும் பொருட்டு யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கொழும்பிலிருந்து ஹையேஸ் வான் ஒன்றில் யாழ்ப்பாணம் வந்த சாரதியான வினோதன் வீட்டுக்கு வரவில்லை. நீண்ட நாட்களாக வீட்டுக்கு திரும்பாத இவரைப்பற்றி, கொழும்பிலிருந்த சகோதரனிடம் தொடர்பு கொண்டபோது அவர் யாழ்ப்பாணம் திரும்பியதாகக் கூறப்பட்டது. இதனை அடுத்து இவரைத் தேடமுற்பட்டபோது ஓமந்தை, முகமாலை சோதனைச் சாவடிகளில் குறித்த ஹையேஸ் வான் யாழ்ப்பாணம் வந்தமைக்கான பதிவுகள் காணப்பட்டன.

இதனை அடுத்து மட்டுவில் பகுதியில் மீட்கப்பட்ட இளைஞனின் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்ட போது, இறந்தவர் தனது மகன் என பேற்றோர் அடையாளம் காட்டினர். மரண விசாரணையின் பின் சடலம் நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

## மீனவர் நால்வர் கைது

(பருத்தித்துறை)

காங்கேசன்துறை கடற்பரப்பில் பிரவேசித்ததாகத் தெரிவிக்கப்பட்டு வல்வெட்டித்துறை ஆதிகோவிலடிப் பகுதியைச் சேர்ந்த நான்கு மீனவர்கள் கடற்படையினரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

சகோதரர்களான தங்கலிங்கம் புவனேஸ்வரன் மற்றும் தங்கலிங்கம் ஸ்ரீதரன், புவனேஸ்வரன் சந்திரமோகன் மற்றும் கே.கரிதாஸ் ஆகிய நான்கு மீனவர்கள் கைது செய்யப்பட்டவர்களாவர்.

நேற்றிரவு காணமற்போன தமது மீன்பிடி வலைகளைத் தேடி சென்றார். அந்தப் படகுகளில் நால்வர் பயணம் செய்திருந்த படகை தடுத்துவைத்த கடற்படையினர் மற்றைய படகில் மற்றைய படகுகளில் சென்றவர்களைத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## உதவி வழங்கும் நாடுகள் கொழும்பில் கூடி ஆராய்வு!

### முடிவு குறித்து நாளை அகாஷி அறிவிப்பார்

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் சர்வதேச நாடுகள், ரோக்கியோ மாநாட்டில் வழங்க உறுதியளிக்கப்பட்ட உதவியின் நிலைப்பாடு குறித்து கொழும்பில் நேற்று ஆராயப்பட்டது.

உதவி வழங்கும் 17 நாடுகளைச் சேர்ந்த இராஜதந்திரிகளும் மற்றும் 7 சர்வதேச உதவி வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றினர். கூட்டத்திற்கு ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி தலைமை வகித்தார்.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் குறித்தும் தற்போதைய அரசியல் நிலைமைகள் பற்றியும் ஆராய்வதற்கு இந்தக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டதாக ஜப்பானிய தூதரகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஜூன் மாதம் ரோக்கியோவில் நடத்தப்பட்ட உதவிவழங்கும் மாநாட்டின் தொடர் நிகழ்வாக இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது.



அந்தக் கூட்டத்தில் 50 க்கும் அதிகமான உதவி வழங்கும் நாடுகளும் சர்வதேச உதவி நிறுவனங்களும் இலங்கையை மீண்டும் கட்டி எழுப்புவதற்கு 450 மில்லியன் டொலரை வழங்கத் தீர்மானித்தன.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் அடங்கலாக உதவி வழங்கும் நாடுகள் இது

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இந்து கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் பொங்கல் விழா

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ள யாழ். மாவட்ட பொங்கல் விழா, நாளை ஞாயிற்றுக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அமைச்சின் உதவிப்பணிப்பாளர் சிவமகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தவிழாவிற்கு அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதமவிருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

நாளை காலை 8 மணிக்கு சுன்னாகம் கதிரமலை சிவன் கோவிலில் விசேட பொங்கல் பூசை வழிபாடுகளுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பாகவுள்ளன. இளைப்பாறிய அதிபர் மங்கையற்கரசி சிற்றம்பலம் அருளுரை வழங்குவார்.

தொடர்ந்து, இராமநாதன் கல்லூரி மைதானத்தில் பாரம்பரிய விளையாட்டுக்கள் இடம்பெறவுள்ளன. பிற்பகல் 3 மணி முதல் கல்லூரி மண்டபத்தில் கலாசார நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. நிகழ்ச்சிகள் நந்திக்கொடி ஏற்றலுடன் ஆரம்பாகும். இராமநாதன் கல்லூரி மாணவிகளின் இறைவணக்கத்தைத் தொடர்ந்து கதிரமலை சிவன் ஆலய பிரதம குரு நா.சர்வேஸ்வரக்குருக்கள் ஆசியுரை வழங்குவார்.

அமைச்சின் ஆலோசகர் து.வைத்திலிங்கம், உடுவில் பிரதேச செயலாளர் திருவாகரன், இராமநாதன் கல்லூரி அதிபர் சிவஞானசுந்தரம் ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்குவர்.

தொடர்ந்து 'புத்துயிர்க்கும் பொங்கற் பொழுது' எனும் தலைப்பில் கவியரங்கம். "தமிழர் பண்பாட்டைக்காப்பதில் விஞ்சி நிற்பவர்கள்" எனும் தலைப்பில் பட்டிமன்றம், கிராமியநடனம், கிராமியப்பாடல்கள், நாடகம் என்பன இடம்பெறும்.

# யாழ். மாவட்ட பாடசாலைகளில் சூழலியல் கல்வி அறிமுகப்படுத்தப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் யாழ். பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில், யாழ். மாவட்டத்தில் சூழலியல் தொடர்பான கல்விச் செயற்பாடு ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

பாடசாலை மாணவர்கள் மற்றும், கிராமப்புற மக்கள் முதலானோருக்கே இந்தச் சூழலியல் கல்வி போதிக்கப்படவுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் மூலமாக, ஆண்டு மூன்று முதல் உயர்தரம் வரை இந்தச் சூழலியல் கல்வி போதிக்கப்படவிருக்கிறது.

கிராம மட்டத்திலும், பாடசாலை மட்டத்திலும் விழிப்புணர்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு இந்தச் சூழலியல் பாதுகாப்புத் தொடர்பாக பிரசார நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படவுள்ளார்கள் என, யாழ். மாவட்ட சூழலியல் பாதுகாப்பு திட்டத்தின் இணைப்பாளர் தி.திருக்குமரன் தெரிவித்தார்.

பொலித்தீன் பாவனையின் தீமை, நிலம், நீர்,வளி முதலானவற்றைப் பாதுகாக்கும்முறைகள் முதலானவை பற்றி இந்தக்குழுக்களினூடாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# அரசியல் நிலைமைகள் குறித்து புதிய கூட்டணியுடன் பேச்சு

(கொழும்பு)

சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி ஆகிய இரு கட்சிகளும் இணைந்து அமைத்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைத்துவத்துடன் அரசியல் நிலைகுறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக ஈ.பி.டி.பி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, கட்சியின் தலைமைப்பீடம் வெளியிட்ட அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இனப்பிரச்சினையைத் தீர்ப்பது குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெளியிட்ட கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவை,

மனித உரிமைகளைப் பாதுகாப்பது, ஜனநாயகத்தை உறுதிப்படுததுவது, தேசிய உற்பத்திகளுக்கு முன்னுரிமை வழங்கக்கூடிய பொருளாதார கொள்கையை உருவாக்குவது, இனங்களுக்கிடையில் ஒருமைப்பாட்டை நிலைநாட்டுவது ஆகியன தொடர்பாக முன்னணி வெளியிட்ட கருத்துக்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை.

இலங்கையில் அரசியல் யாப்பு உட்பட பல விடயங்கள் தொடர்பாக, உன்னிப்பாகக் கவனம் செலுத்தி புரிந்துணர்வுடனும், தெளிவான சிந்தனைகளுடன் இந்தக் கருத்துக்களை முன்வைக்கவுள்ளோம்.

இது தொடர்பாக, மக்கள் விடுதலை முன்னணி - சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றின் தலைமைத்துவத்துடன் பேச்சுவார்த்தை நடாத்த உத்தேசித்துள்ளதாகவும், அந்தக்கட்சி தெரிவிக்கின்றது.

# முதலாம் ஆண்டு மாணவர் சீருடைக்கான விண்ணப்பங்களை விரைவாக அனுப்புக

## நல்லூர் பிரதேச செயலர் கோரிக்கை

(நல்லூர்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் வசிக்கும் முதலாம் ஆண்டில் புதிதாக இணைக்கப்பட்ட மாணவர்களின் சீருடைக்கான விண்ணப்பங்களை விரைவாகப் பூர்த்திசெய்து ஒப்படைக்குமாறு - நல்லூர் பிரதேசசெயலர் திருமதி எஸ். தெய்வேந்திரம் கேட்டுள்ளார்.

இந்த வருடத்திற்கான மாணவர் சீருடைகளை வழங்குவதற்கான சகல நடவடிக்கைகளும் பூர்த்தியடையும் நிலையிலுள்ளது.

அதில் முதலாம் ஆண்டில் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் விபரம் மட்டும் முழுமையாக கிடைக்கப் பெறாத நிலையில் உள்ளதனால், சீருடை விநியோகப் பணிகளுக்கான செயற்பாடுகள் சிரமமான நிலையில் தொடர்கின்றன.

பெற்றோர்கள் இந்த விடயத்தில் அக்கறையுடன் செயற்பட்டு தமது பிள்ளைகளின் விபரத்தைப் பதிவு செய்துகொள்ளல்வேண்டும்.

கிராம சேவையாளர்களும் இந்த விடயத்தில் அக்கறையுடன் செயற்பட்டு தமது பிரதேசத்திலுள்ள முதலாமாண்டு மாணவர்களின் விபரத்தை வழங்குவதன்மூலம், இந்தப்பணியை நிறைவுசெய்துகொள்ளக் கூடியதாக அமையும்.

இவர்களுடன் பாடசாலை அதிபர்களும் இந்தவிடயத்தில் சரியான நடவடிக்கை எடுத்து, சீருடைத் துணிக்கான விண்ணப்பத்தை அனுப்பி வைக்குமாறு உரியவர்களிடம் அறிவுறுத்துவது அவசியம்.

இத்தகைய பொறுப்பற்ற செயல்களால் சீருடை வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதுடன், ஏழைகள் அவற்றைப் பெறுவதற்கு நீண்டகாலம் காத்திருக்கவேண்டிய நிலையும் தோன்றியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(ப)

### ஆசிரியர்களுக்கான செயலமர்வு

வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 8 தமிழ் மொழியும் இலக்கியமும் கற்பிக்க தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான செயலமர்வு, இன்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் தவறாது இந்தச் செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலய தமிழ் பாட உதவிச் கல்விப் பணிப்பாளர் திருமதி சு.நந்தபாலன் தெரிவித்தார்.(17)

# போதிய விண்ணப்பங்கள் கிடைக்காமையால் ஜப்பானிய மொழி கற்பிக்கும் முயற்சி கைகூடவில்லை

## யாழ். தொழில்நுட்பக்கல்லூரி அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில்நுட்பக்கல்லூரியில் இம்முறை புதியபயிற்சி நெறியாக ஜப்பானிய மொழி கற்பிக்கப்பட இருந்தபோதிலும், மாணவர்களின் விண்ணப்பங்கள் குறைவாக இருந்தமையால் அந்தப்பாடநெறி ஆரம்பிக்கப்படவில்லை என - கல்லூரியின் அதிபர் ந.யோகராஜன் தெரிவித்தார்.

யாழ். தொழில்நுட்பக்கல்லூரியில் இந்த ஆண்டு புதிய பல பாடங்களை அறிமுகப்படுத்துவதுடன், ஏராளமான மாணவர்களை அனுமதிக்கவும் திட்டமிட்டிருந்தேன். கா.பொ.த. சாதாரண தரம் வரை கல்வி கற்றுவிட்டு பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் வீடுகளிலும், வீதிகளிலும் காலத்தை வீணடிக்கின்றனர். அவர்களுக்குப் பயிற்சி அளித்து சமூகத்தில் ஓர் பயனுள்ள மனிதனாக உருவாக்குவதற்குப் பெரிதும் முயற்சிக்கின்றேன்.

இதற்காக மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டும், வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்டும் யாழ். தொழில்நுட்ப கல்லூரியை பல்வேறு வழிகளில் வளர்த்து வருகின்றேன்.

இன்று ஆயிரத்து ஐநூறுக்கும் அதிகமான மாணவர்கள் இங்கு கல்வி கற்கின்றனர்.

கடந்த ஆண்டு ஜப்பானிய மொழியை ஒருபாடமாக அறிமுகப்படுத்துவற்காக பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. இதற்காக யாழ்ப்பாணத்தில் உள்ள ஜப்பானிய மொழி விரிவுரையாளர்கள் மற்றும் ஜப்பான் நாட்டு கல்விமான் முதலானோருடன் தொடர்பு கொண்டு இதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளபட்டிருந்தன. எனினும் அது சாத்தியப்படாது போனது.

இந்தவருடமும் அப்பாடநெறியை அறிமுகப்படுத்துவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. எமக்கு ஐந்திற்கும் குறைவான மாணவரே அப்பாடநெறிக்கு விண்ணப்பித்திருந்தனர்.

ஒரு பாடநெறியை நடத்துவதானால் குறைந்தது 35 மாணவர்களாவது எமக்குத் தேவை. அத்துடன், தொடங்கப்படும் பாடநெறி குறைந்தது 10 வருடங்களுக்காவது தொழில்நுட்பக்கல்லூரியில் கற்பிக்கப்படுதல் வேண்டும். இதனால் இந்த ஆண்டும் அந்தப்பாடநெறி அறிமுகப்படுத்த முடியாமல் போய்விட்டது.

இது எமக்கு மிகுந்த மன வேதனையைத்தருகிறது. மேலும், அரசியல் பாடநெறிக்கான ஒரு டிப்ளோமாப் பயிற்சியையும் அறிமுகப்படுத்த முயற்சிக்கிறோம். அதற்கான அனுமதி இன்னமும் கிடைக்கவில்லை. கிடைத்ததும் அந்தப்பாடநெறி எமது கல்லூரியில் ஆரம்பமாகும்.

இதுபற்றி யாரும் அவசரப்படதேவையில்லை. அனுமதி கிடைத்ததும் அவர்களுக்கு பத்திரிகைகள் மூலம் அறிவித்தல் கிடைக்க செய்ய முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

### ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகக் கூட்டம்

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்டத்தின் சகல கிளைகளுக்குமான தலைவர், செயலாளர், பொருளாளர்களுக்கான மாவட்ட தாய்ச்சங்க நிர்வாகிகள் கூட்டம் நாளை நடைபெறவுள்ளது.

க.கணேசமூர்த்தி தலைமையில் நாளை காலை 10.30 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் மகாசிவம் கலந்துகொள்ளவுள்ளார்.

எனவே அனைத்து மாவட்ட தாய்சசங்க நிர்வாகிகளையும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட செயலாளர் க.குமாரசாமி கேட்டுள்ளார்.

### மணவாளக் கோலம் திங்களன்று

(வடமராட்சி)

வதிரி பூவற்கரை பிள்ளையார் கோவில் வருடாந்த மணவாளக் கோல உற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் விநாயக பெருமான் ஊர்வலமாக அக்கிராமத்தைச் சுற்றிவரவுள்ளார். (17)

நிறைஞ்சனாஸ் சங்கானை

அர்ஜுன், சிம்ரன் நடித்த

ஏழுமலை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

Can You do a lot of

(சி-2004)

யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா
நடித்த

ஜெய்

காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(சி-2005)

# யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு 12 இலட்சம் ரூபா பொருட்கள் வந்தன

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு தன்னியக்கி இயந்திரங்கள் பயிற்சி நெறிக்காக, 12 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் கொழும்பிலிருந்து எடுத்தவரப்பட்டுள்ளது.

கல்லூரியின் அதிபர் ந.யோகராஜன் இந்தப்பொருட்களை நேற்று கொழும்பிலிருந்து எடுத்துவந்துள்ளார்.

ஜப்பான் நாட்டு தயாரிப்புக்களான இயந்திரங்கள் பற்றிக் கற்பதற்கான உபகரணங்களே இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டிருக்கிறது என அவர் தெரிவித்தார்.

இந்த உபகரணங்கள் தொழில்நுட்பக் கல்லூரியில் அறிமுகப்படுத்தப்படவுள்ள லண்டன் சான்றிதழுக்குரிய " சிற்றி அன்ட் சில்ஸ்" பாடநெறியின் கற்கைக்கும் உதவும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒரு தொகுதி இயந்திரவியல் உபகரணங்களை பெறுவதற்கு மூன்றாம் நிலைக் கல்வியமைச்சுடன் பேசியிருப்பதாகவும், அவர்கள் விரைவில் அனுப்புவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

THE ROYAL COLLEGE OF JAFFNA

ஆண்டு 1இல் இருந்து 11 வரை எல்லாப் பாடங்களும்,
GRAMMAR, SPOKEN ENGLISH மேற்படிப்பு வரை

பதிவுக்கு:- அதிபர்
426(302), K.K.S வீதி,
யாழ்ப்பாணம். (588)

### அரச அதிபர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வரட்சி நிலையில் பயிர்ச் செய்கையை பேணல் என்னும் திட்டம் பற்றி ஆராய்வதற்காக, வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ள மாவட்ட அரசஅதிபர்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கான விவசாய சம்மேளனத்தின் ஏற்பாட்டிலான மகாவலித் திட்டத்தைப் பார்வையிடும் நிகழ்ச்சி நாளை சமுத்தேகமவில் இடம் பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

றோமன் கத்தோலிக்க பெருமக்களே
உங்களுக்கு ஓர் நற்செய்தி



பழைய ஏற்பாடும் சேர்ந்த பைபிள் 275/=, புதிய ஏற்பாடு மட்டும் 85/= சொற்ப பிரதிகள் மட்டுமே கைவசமுள்ளது. உடனே பெற்றுக்கொள்ள

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 021 2225542

நகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.



## பௌத்தர்களை மதம் மாறத் தூண்டும்

# நிறுவனங்களை தடை செய்யக்கோரி தேசிய பிக்குகள் முன்னணி பேரணி

பௌத்தர்களை மதமாற்றம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களைத் தடைசெய்யுமாறு கோரி, தேசிய பிக்குகள் முன்னணி நேற்றுமுன்தினம் கொழும்பில் பேரணி ஒன்றை நடத்தியது.

தேசிய பிக்குகள் முன்னணியைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட பிக்குகள் - புறக்கோட்டையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொண்டனர்.

நாட்டில் அறுநூறுக்கும் மேற்பட்ட கிறிஸ்தவ மதக்குழுக்கள் - தொண்டர் நிறுவனங்களாகவும், மனிதநேய அமைப்புக்களாகவும் பதிவுசெய்துகொண்டு, பணத்தைக் கொடுத்து பௌத்தர்களை மதம்மாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகத் தேசிய பிக்குகள் முன்னணி குற்றம்சாட்டியது.

இந்த அமைப்புக்களைத் தடைசெய்யுமாறு கோரியே நேற்றுமுன்தினம் பேரணி நடத்தப்பட்டது. நேற்றுமுன்தினம் மாலை நடத்தப்பட்ட இந்தப் பேரணியைத் தொடர்ந்து, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு ஒரு மகஜர் அனுப்பிவைக்கப்பட்டது.

மதமாற்ற நடவடிக்கையில் ஈடுபடும் அரசசார்பற்ற நிறுவனங்களை - உடனடியாகத் தடைசெய்து, பௌத்தமதத்தைக் காக்க வேண்டும் என்று இந்த மகஜரில் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

முன்னதாக கோட்டை ரயில்நிலையத்துக்கு முன்பாகவுள்ள போதிமரத்தடியில் ஒன்றுகூடிய பெரும்பாலான பௌத்த பிக்குகள், பின்னர் பேரணியாகப் புறப்பட்டுச் சென்றனர்.

போதிமரத்தடியில் நடந்த பிரார்த்தனையை அடுத்து, ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் டி.எஸ்.குணரத்தினவிடம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கான மகஜர் கையளிக்கப்பட்டது.

தேசிய பிக்குகள் முன்னணியின் செயலாளர், வண.கலேவெல சந்திரலோக தேரர் இது தொடர்பாக மேலும் கருத்து தெரிவிக்கையில் - மதம் மாற்றும் நிறுவனங்களைத் தடைசெய்யுமாறு ஜனாதிபதிக்கு அதிகப்படியான அழுத்தங்களை கொடுத்திருப்பதாகக் கூறினார்.

## காலாவதியான, சட்டவிரோத மருந்துகள் கைப்பற்றப்பட்டன

எழுபத்தைந்து இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய சட்டவிரோத மற்றும் காலாவதியான மருந்துப்பொருட்கள் கொழும்பு கடவத்தை மற்றும் மகரகம பகுதிகளில், கடந்த புதன்கிழமை ஏராளமான மருந்துப் பொருட்கள் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட மருந்து வகைகளில் பெரும்பாலானவை காலாவதியான மருந்து வகைகளே ஆகும். இவை அண்மைக் காலத்தில் தனியார் மருந்தகங்களில் விற்பனை செய்யப்படுவதற்காக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்தன.

கடவத்தைப் பகுதியில் ஏற்கனவே இவ்வாறான மருந்து வகைகள் கைப்பற்றப்பட்டிருந்தன. இதனுடன், தொடர்புடையவர்கள் எனும் சந்தேகத்தின் பேரில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான மருந்து வகைகள் கைப்பற்றப்பட்டமையானது - நாட்டின் ஏனைய பகுதிகளிலும் சட்டவிரோதமானமுறையில் மருந்துகள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.(01)



தேசிய பிக்குகள் முன்னணி நடத்திய பேரணியில் கலந்துகொண்ட பிக்குகளைப் படத்தில் காணலாம்.

## மட்டக்களப்பு பிரதேசத்தில்

# வைத்தியசாலை புனரமைப்பிற்கு 5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

மட்டக்களப்பின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் வைத்திய வசதிகளை விருத்திசெய்யவென நிக்கொட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் 5 கோடி ரூபா செலவில் மூன்று வைத்தியசாலைகள் அமைக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு வைத்திய அதிகாரி டபிள்யூ.வில்லியம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில், வைத்திய வசதிகள் மிகவும் பாதிக்கப்பட்டநிலையில் உள்ளன. அதனைச் சீர்படுத்தும் நடவடிக்கையாக மூன்று வைத்தியசாலைகள் அப்பகுதியில் அமைக்கப்பட்டுவருகின்றன.

இந்த வைத்தியசாலை அமைப்பு வேலைகளில் தொண்ணூறு வீதமானவை முடிவுற்றுள்ளன. வாகரையில் சுற்றயல்கூறு வைத்தியசாலை, மண்டபத்தடி கிராமிய வைத்தியசாலை, உன்னிச்சை மத்திய மருந்தகம் முதலியவற்றின் கட்டடங்களே புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்மூலம் - பின்தங்கிய பகுதிகளில் மக்கள் வைத்திய வசதிகளைப் பெறக்கூடியதாக அமைவதுடன், பல வீண் உயிரிழப்புக்களையும் தவிர்க்கமுடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

# நீர்கொழும்பிலுள்ள சிறைக்கைதிகளுக்கு உணவுப் பொருள் விநியோகம் ஸ்தம்பிதம்

(கொழும்பு)

நீர்கொழும்பு சிறைக்கைதிகளுக்கான உணவுப்பொருட்கள் விநியோகம் நேற்றுமுன்தினம் முதல் நிறுத்தப்பட்டிருக்கின்றது.

மரக்கறிகள், இறைச்சி வகைகள் என்ற வகையில், சிறைச்சாலைக்கு இதுவரை காலமும் விநியோகிக்கப்பட்ட உணவுப்பொருட்களின் விநியோகமே தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

1300 பேர் இந்த சிறைச்சாலையில் உள்ளனர். இதில் 62 பேர் வெளிநாட்டவர்.

இந்த கைதிகளுக்கு ஒரு நாளைக்கு 700 தேங்காய், 70 கிலோ இறைச்சி, 200 கிலோ மரக்கறி என்பன தேவையாகவுள்ளது.

சிறைச்சாலைக்கு இந்த பொருட்களை விநியோகித்து வந்த நிறுவனத்திற்கு, ஒரு கோடி ரூபாவை சிறைச்சாலை நிர்வாகம் செலுத்தவேண்டியிருப்பதால், அந்த நிதி செலுத்தப்பட்ட பின்னரே உணவுப்பொருட்களை வழங்கமுடியும் எனக் குறித்த நிறுவனம் கூறியுள்ளது.

இதனால், நேற்றுமுன்தினம் முதல் நீர் கொழும்பு சிறைச்சாலைக்கு வழங்கப்பட்டு வந்த உணவு விநியோகம் நிறுத்தப்பட்டிருக்கின்றது. (01)

# தேர்தல் சீர்திருத்தம் குறித்த இடைக்கால அறிக்கை தாக்கல்

(கொழும்பு)

தேர்தல் முறையை மாற்றியமைப்பது தொடர்பாக தேர்தல் சீர்திருத்தம் தொடர்பாக ஆராயும் நாடாளுமன்ற தெரிவுக்குழு நேற்று இடைக்கால அறிக்கையொன்றை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தது.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவர் தினேஷ் குணவர்த்தன இந்த அறிக்கையை சமர்ப்பித்தார்.

மாகாணசபைகளில் மேலதிகமாக உறுப்பினர்களை தெரிவுசெய்வது தொடர்பாகவும் தேர்தல்களை ஒரேநாளில் நடத்துவது தொடர்பாகவும், பொதுத்தேர்தல் ஒன்றின்போது கடைப்பிடிக்கவேண்டிய நெறிமுறைகள் தொடர்பாகவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த அறிக்கை தொடர்பான விவாதம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (01)

## குழுக்களிடையே மோதல் 12 பேர் படுகாயம்

மாணவர குழுக்கள் இரண்டுக்கிடையே நடைபெற்ற மோதலில் - 12 பேர் காயமடைந்த சம்பவம் கடந்த புதன்கிழமை ருகுணு பல்கலைக் கழகத்தில் இடம்பெற்றது.

காயமடைந்த மாணவர்களில் ஐந்து பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர.

மாணவர் குழுக்களிடையே நடைபெற்ற இந்த மோதலைத் தடுப்பதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் எந்தவிதமான முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை எனப் பல்கலைக்கழக மாணவர்கள் கூறினர்.

நிர்வாகம் தலையிடாததை எதிர்த்து, நேற்று முன்தினம் முதல் பல்கலைக்கழக மாணவர்கள உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். (01)

# கிளிநொச்சி மருத்துவமனைக்கு மின்பிறப்பாக்கியொன்று அன்பளிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் புதிய மின்பிறப்பாக்கி ஒன்றை வழங்கினார்.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் நீண்டகாலமாக பாவனையில் இருந்த இரு மின்பிறப்பாக்கிகள் சேதமடைந்திருந்தன. இதனால், வைத்தியசாலையில் மின்சாரத்தினை பெறுவதில் நெருக்கடிநிலை ஏற்பட்டிருந்தது.

அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஆகியோர் அந்த வைத்திய சாலைக்கு நேரில் சென்று நிலைமையை பார்வையிட்டிருந்தனர்.

இதையடுத்து, 27 கிலோவாட்ஸ் மின் உற்பத்தி செய்யக்கூடிய மின்பிறப்பாக்கி ஒன்றை வைத்தியசாலை நிர்வாகத்திடம் ஒப்படைத்தனர். (01)

## நூல் வெளியீட்டு விழா

(நெல்லியடி)

'யாழ்ப்பாணத்து வாழ்வியற்கோலங்கள்' என்ற கலாநிதி எஸ்.சிவலிங்கராஜாவின் நூல் வெளியீட்டுவிழா - நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நாளை காலை 10 மணிக்கு இடம்பெறும் இந்த நிகழ்வை - கோட்டக்கல்வி அதிகாரி க.அம்பலவாணர் தலைமை தாங்கி நடத்துவார்.

நூலின் வெளியீட்டுரையை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் குப்பிளான் ஐ.சண்முகமும், ஆய்வுரைகளை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் நாச்சியார் செல்வநாயகமும், சமூகவியல் துறை உதவி விரிவுரையாளர் இராஜேஸ் கண்ணனும் ஆற்றுவர்.

# சுகாதாரம் மற்றும் ரயில் சேவைகளின் குறைகளைக் கண்டறிய நடவடிக்கை

(கொழும்பு)

சுகாதாரசேவை, ரயில் சேவை ஆகியவற்றில் காணப்படுகின்ற குறைபாடுகளைக்களையும் நோக்கில், அந்தந்த அமைச்சுக்களுடன் பிரதம மந்திரி பேச்சுக்களை நடத்தினார்.

புதன்கிழமை சுகாதார அமைச்சர் தயாரத்னவையும், ரயில் சேவை தொடர்பாக அமைச்சர் திலக் மாரப்பனவையும் சந்தித்து இது தொடர்பாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேசினார்.

சுகாதாரசேவை ஊழியர்கள் கேட்கும் கோரிக்கைகளுக்குச் செவிசாய்த்த பிரதம மந்திரி, சம்பள நிலுவையின் நூற்றுக்கு ஐம்பது வீதத்தை உடனடியாகச் செலுத்த வேண்டும் என்றும், 2006 ஆம் ஆண்டளவில் மீதி 25 வீதத்தையும் செலுத்துமாறும் பிரதம மந்திரி தெரிவித்தார்.

இந்த அறிவிப்பு சுகாதாரசேவை ஊழியர்களுக்கு நேற்று கிடைக்கவிருந்தது. இந்த அடிப்படையில் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து மேற்கொள்வதா? இல்லையா? என்ற முடிவை சுகாதார ஊழியர்கள் எடுப்பார்கள்.

இதேவேளை, ரயில் சேவையின் முழு நிர்வாகமும் திணைக்களம் கவனித்துக் கொள்ளும். திணைக்களத்தின் முழு கண்காணிப்புப் பணிகளையும் அதிகாரசபை கவனித்துக கொள்ளுமாறு நடவடிக்கைகளை ஏற்படுத்துமாறும், திணைக்களங்களில் தொடர்ந்தும் வேலை செய்ய விரும்புவோருக்கு அனுமதியை வழங்குமாறும் பிரதமர் கேட்டுகொண்டார்.

ரயில் சேவை ஊழியர்களும் இது தொடர்பாக கருத்துக்களை இன்னமும் வெளியிடவில்லை. (01)

# 13 பஸ் டிப்போக்களை ஏலத்தில் விட அரசு தீர்மானம்

## இந்தமாத இறுதிக்குள் நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டிலுள்ள பதின்மூன்று பஸ் டிப்போக்களை ஏலத்தில் விடுவதற்கு அரசாங்கம் மீண்டும் தீர்மானித்துள்ளது.

இந்த மாத இறுதிக்குள் பஸ் டிப்போக்கள் ஏலவிற்பனை செய்யப்பட்டுவிடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே, ஏலவிற்பனை செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கபபட்டபோது, அந்த சந்தர்ப்பத்தில் பணம் உரிய முறையில் செலுத்தப்படாமை காரணமாக மீண்டும் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அரசாங்கம் ஏல விற்பனையைத் தனியாருக்குச் செய்கின்றபோதும், குறிப்பிட்ட 13 பஸ் டிப்போக்களின் மேம்பாட்டுக்கு அரசாங்கம் நிதி உதவி செய்யவுள்ளது.

2500 மில்லியன் ரூபாவை முதலாவது வருடத்திற்கு அரசு உதவியாக வழங்கும். 1500 மில்லியன் ரூபாவை இரண்டாவது வருடத்திலும், 500 மில்லியன் ரூபாவை மூன்றாவது வருடத்திலும் அரசு வழங்கும்.

இதன்மூலம், மக்களுக்குத் தொடர்ந்தும் பஸ் டிப்போக்களின் சேவையைப் பெற்றுக் கொடுப்பதே நோக்கமாகவுள்ளது.

தனியார் நிறுவனங்களிடம் பஸ் டிப்போக்கள் கையளிக்கப்பட்டாலும்கூட, வருடாந்தம் 1400 மில்லியன் ரூபாவை அரசாங்கம் ஊழியர்களுக்குச் சம்பளமாகக் கொடுக்கவுள்ளது.(01)

# இந்திய பந்து வீச்சாளர்களுக்கு பயிற்சி; அக்ரம் மீது பாகிஸ்தான் வீரர்கள் கண்டனம்!



வசீம் அக்ரம்

(கராச்சி)

பாகிஸ்தான் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான வசீம் அக்ரம். தற்போது சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்று வர்ணனையாளராக உள்ளார்.

இவர் இந்திய அணியின் பந்து வீச்சு பயிற்சியாளராக நியமிக்கப்படவுள்ளதாக கடந்த சில மாதங்களுக்கு முன்பு தகவல் வெளியானது. இந்த தகவலை இருநாடுகளும் மறுத்தன.

இந்த நிலையில் அவுஸ்ரேலியாவில் 3 நாடுகள் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் இந்திய அணி வேகப்பந்து வீச்சாளர் சகீர்கானுக்கு காயம் ஏற்பட்டதால், அவருக்கு பதிலாக அணியில் இளம் பந்து வீச்சாளர் இர்பான் பதான் சேர்க்கப்பட்டார். இவர் சிறப்பாகவும் பந்து வீசி வருகிறார்.

இந்த நிலையில் - நேற்று இந்திய வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டபோது வசீம் அக்ரம், இர்பான் பதானுக்கு பந்து வீச்சு நுணுக்கங்களை கூறினார். மேலும், அவர் பதான் பற்றி கூறுகையில் அவருக்கு மிகச்சிறந்த எதிர்காலம் இருப்பதாகவும், இவர் தன்னைப்போன்று பந்துவீசுவதாகவும் கூறினார்.

இது பாகிஸ்தான் நாட்டில் பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது. இது குறித்து அந்த நாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைத் தலைவர் ரமீஷ் ராஜா கூறியதாவது:-

இந்திய அணி மார்ச் மாதம் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து விளையாடவுள்ளது. இந்த நிலையில் வசீம் அக்ரம், எந்தவித அதிகார பூர்வ அறிவிப்பும் இல்லாமல் இந்திய வீரர்களுக்கு பயிற்சி நுணுக்கங்களை கூறியுள்ளார். இது சரியானதல்ல என்றும், இதனை நிறுத்திக் கொள்ளவேண்டும் என்றும், அவர் பயிற்சி அளித்ததற்கு கடும் கண்டனம் தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார். மேலும், பல பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களும் இதற்குக் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

# ராவிட் மீதான நடவடிக்கைக்கு லொயிட் விளக்கமளித்தார்!



ராவிட்


சிம்பாப்வே அணிக்கு எதிரான ஆட்டத்தின்போது, இந்திய வீரர் ராவிட் பந்தைச் சேதப்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டது. 3-வது நடுவர் பீட்டர் பார்க்கர் கூறிய இந்த குற்றச்சாட்டு தொடர்பாக, ராவிட்டுக்கு 50 சதவீத அபராதம் விதிக்கப்பட்டது. பந்தை பொலிஸ் செய்ய நினைத்து தனது வாயில் இருந்து ராவிட் எச்சில் தொட்டு பந்தின் மீது தடவினார். அபபோது வாயில் போட்டிருந்த சுவிங்கம் பந்தின்மீது ஒட்டிக்கொண்டது. தன் தவறை உணர்ந்த ராவிட் அவசரப்பட்டு, பந்தை சுரண்டினார்.

வீடியோவில் பதிவு செய்யப்பட்ட இந்தச சம்பவம் தொடர்பாக, போட்டி நடுவர் கிளைவ் லொயிட் நடவடிக்கை எடுத்தார்.

இதுதொடர்பாக பேட்டி அளித்த லொயிட், திட்டமிட்டு ராவிட் இந்த செயலை செய்திருக்கிறார். எனவே அவர் மீதான நடவடிக்கை சரிதான் என்றார். அவுஸ்ரேலிய பத்திரிகைகள் அனைத்தும் இதை முதல பக்கத்தில் செய்தியாக வெளியிட்டன. ராவிட் தொடர்பாக லொயிட் வெளியிட்ட கருத்து, இந்திய வீரர்கள் மத்தியில் அதிருப்தியை உண்டாக்கியது.

நிலைமை மோசமாவதை உணர்ந்த லொயிட், தன்னுடைய பேடடியை பத்திரிகையாளர்கள் தவறாக புரிந்து கொண்டனர் என்று விளக்கம் கொடுத்துள்ளார். இதுகுறித்து லொய்ட் கூறுகையில், எதிர்பாராமல் இந்த தவறு நடந்திருக்கலாம் ஆனால், போட்டி நடுவர் என்ற முறையில் நடந்த தவறைத்தான் பார்த்து நடவடிக்கை எடுக்க முடியும். இதைத்தான் சொன்னேன். ஆனால், பத்திரிகையாளர்கள் அவசரப்பட்டுவிட்டனர் என்றார். தனிப்பட்ட முறையில் இதறகாக ராவிட்டிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன் என்றும் லொயிட கூறினார்.

# வெர்மியூலனின் சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நடந்தது!



வெர்மியூலன்

தலையில் பலத்த காயம் காரணமாக, சிகிச்சை பெற்றுவந்த சிம்பாப்வே வீரர் வெர்மியூலனின் சத்திர சிகிச்சை வெற்றிகரமாக நடந்தது.

இந்தியாவுக்கு எதிரான முத்தரப்பு கிரிக்கெட் போட்டியின்போது, சிம்பாப்வே வீரர் வெர்யூமிலன் காயம் அடைந்தார். இர்பான் பந்தை எதிர் கொண்டபோது, இவர் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. பந்து பட்டதில் அவரது மண்டை ஓட்டில் கீறல் ஏற்பட்டு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இதையடுத்து, மெல்பேர்ன் மருத்துவமனையில் நேற்று முன்தினம் அவருக்கு அறுவை சிகிச்சை நடந்தது. பிளவுபட்டிருந்த மண்டை ஓடு சரியாக ஒட்டவைக்கப்பட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். சில நாட்கள் ஓய்வு எடுத்த பின்னர், வெர்மியூலன் தாயகம் திரும்பவுள்ளார். உலக கோப்பையின் போதும், இவர் இதேபோல் காயம் அடைந்தார்.

## விளையாட்டு

## கில்கிறிஸ்ற் சாதனை

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்டவீரர்களில் ஒருவரான கில்கிறிஸ்ட், சிறந்த விக்கெட் கீப்பராகவும் செயற்பட்டு வருகிறார். நேற்றுமுன்தினம் நடந்த இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் கங்கூலி அடித்த பந்தை பிடிததன் மூலம், ஒரு புதிய சாதனையை இவர் படைத்துள்ளார். இதன்மூலம் அவர் விக்கெட் கீப்பராக செயற்பட்டு 300 பிடிகளை பிடித்த வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.



கில்கிறஸ்ட்

## மகளிர் உதைபந்தாட்ட அணி யாழில் உருவாக்கும் முயற்சி!

மகளிர் உதைபந்தாட்ட அணியொன்றினை யாழ். மாவட்டத்தில் உருவாக்குவதற்கு யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை ஒழுங்குகள் செய்துள்ளது.

இநத அணியில் பங்குபற்ற விரும்பும் மகளிர், யாழ்.மாவட்ட விளையாட்டுப் பொறுப்பதிகாரியாக உள்ள றொகான் ராஜசிங்கத்துடன் - யாழ். செயலகத்திலுள்ள அவரது அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# நாடாளுமன்ற தேர்தலில் ராகுல் - பிரியங்கா போட்டி

(புதுடெல்கி)

நான்கு மாநில சட்டசபை தேர்தலில் படுதோல்வியை சந்தித்த காங்கிரஸ், நாடாளுமன்ற தேர்தலில் ஆட்சியை கைப்பற்றியே தீரவேண்டும் எனறமுனைப்புடன் களத்தில் இறங்கி உள்ளது. காங்கிரஸ் தலைவர் சோனியா, ஏற்கனவே தேர்தல் பிரசாரத்தை தொடங்கிவிட்டார். பிரணாப் முகர்ஜி குழுவினர் வகுத்து கொடுத்துள்ள திட்டத்தின்படி, அவர் பிரசார வியூகங்களை வகுத்துள்ளார்.

இதற்கிடையே பாரதீய ஜனதா தலைவர்களின் புயல்வேக 'ரத யாத்திரை' பிரசாரத்துக்கு தக்க பதிலடி கொடுக்கவேண்டுமானால், பிரியங்கா பிரசாரம் செய்யவரவேண்டும் என்று, மாநில காங்கிரஸ் தலைவர்கள் வலியுறுத்தினார்கள். "சோனியா வெளிநாட்டு பெண்" என்ற கோஷத்தை முறியடிக்க பிரியங்காவால்தான் முடியும், என்று மூத்த காங்கிரஸ் தலைவர்ளும் கருத்து தெரிவித்தனர்.

இதை ஏற்றுக் கொண்ட சோனியா, தேர்தல் பிரசாரத்துக்கு ராகுல், பிரியங்கா இருவரையும் களத்தில் இறக்க அதிரடி முடிவு எடுத்தார். அதன் முதல் கட்டமாக ராகுல், பிரியங்கா இருவரும் அமேதி தொகுதிக்கு சென்று தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டனர்.



சுற்றுப்பயணத்தில் ராகுல் - பிரியங்கா

அமேதி தொகுதி சந்துபொந்துக்கெல்லாம் ஏற்கனவே போய் இருக்கும் பிரியங்கா, இந்த தடவை முக்கிய நிர்வாகிகளை அழைத்து ராகுல்காந்தியை அறிமுகம் செய்தார். பிறகு ராகுலுடன் அவர் குக்கிராமங்களுக்கு சென்று மக்களுடன் பேசினார்.

அமேதி மக்கள் காட்டிய அன்பில் நெகிழ்ந்து போன ராகுல் - பிரியங்கா இருவரும் தீவிர அரசியலில் குதிக்க ஆலோசித்து வருவதாக தெரிவித்தனர்.

இந்த நிலையில் பிரியங்கா, ராகுல் இருவரும் தேர்தலில் போட்டியிட முடிவு செய்து இருப்பதாக தெரியவந்துள்ளது. ராகுல் காந்தி உத்தரபிரதேசத்தில் உள்ள அமேதி அல்லது ரேபரேலி தொகுதியில் நிறுத்தப்படக்கூடும் என்று கூறப்படுகிறது.

எனவே, பிரியங்கா ஆந்திரா அல்லது கர்நாடக மாநிலத்தில் உள்ள காங்கிரசுக்கு வலுவான தொகுதியில் நிறுத்தப்படலாம் என்று காங்கிரஸ வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின்றன. அநேகமாக அவர் கர்நாடகாவில் உள்ள ஒரு தொகுதியில் நிற்பார் என்று தெரிகிறது. பிரிங்காவை தேர்தலில் போட்டியிட வைப்பதன் மூலம், பா.ஜனதா சவால்களை எளிதாக உடைத்தெறிய முடியும் என்று காங்கிரஸ் நம்புகிறது.

## நெடுமாறன் பிணையை எதிர்த்து

# தமிழகஅரசு செய்த மனு உச்ச நீதிமன்றால் தள்ளுபடி!

(புதுடெல்கி)

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறனுக்கு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய பிணை அனுமதி உத்தரவை எதிர்த்து, உச்ச நீதிமனறத்தில் தமிழக அரசு தாக்கல் செய்திருந்த மேல்முறையீட்டுமனு நேற்று நிராகரிக்கப்பட்டது.

தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவாகப் பேசியதாகக் கூறி, தமிழக அரசு நெடுமாறனை கடந்த வருடம் பொடா சட்டத்தின்கீழ் கைது செய்தது. இந்த வழக்கில், சென்னை உயர் நீதி மன்றத்தில் நெடுமாறனுக்கு பிணை அனுமதி கிடைத்தது.

இந்த பிணைஅனுமதி உத்தரவை எதிர்த்து, தமிழக அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தது. இதை நேற்று விசாரித்த உச்ச நீதிமன்றம் மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்தது. இதனால், அவரது பிணைவிடுதலை உறுதியாகிவிட்டது.

# ஸ்பிக் ஊழல் வழக்கிலிருந்து ஜெயலலிதாவுக்கு விடுதலை!

(சென்னை)



ஜெயலலிதா

ஸ்பிக் பங்கு பத்திர ஊழல் வழக்கில், முதல்வர் ஜெயலலிதா உள்ளிட்ட மூன்று பேரையும் நிரபராதிகள் என அறிவித்து, தனி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. தமிழக அரசின் டிட்கோ நிறுவனம் வசம்இருந்த ஸ்பிக் நிறுவன பங்குகளை ஸ்பிக்குக்கே விற்றதில் ரூ. 29 கோடி ஊழல் நடந்ததாக கூறி ஜெயலலிதா, முன்னாள் தொழில்துறைச் செயலாளர் ராமச்சந்திரன், ஸ்பிக் நிறுவன தலைவர் ஏ.சி.முத்தையா ஆகியோர் மீது சென்னை தனி நீதிமன்றத்தில் சி.பி.ஐ. வழக்குத் தொடர்ந்தது.

பங்குகளை விலையைக் குறைத்து விற்க முடிவு செய்தது ஜெயலலிதா தான். அவர்தான் இந்த முழுச்சதிக்கும் காரணம் என சி.பி.ஐ கூறியிருந்தது.

அவர் அளித்த தீர்ப்பில் ஜெயலலிதா, ராமச்சந்திரன், ஏ.சி.முத்தையா ஆகியோர் மீதான குற்றச்சாட்டுக்களை சி.பி.ஐ. சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை. ஸ்பிக் நிறுவன பங்குகளை விற்றதால் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டதை நிரூபிக்கவும் போதுமான ஆதாரங்களைத் தாக்கல் செய்ய தவறிவிட்டது. எனவே, மூவரையும் நிரபராதிகள் என அறிவித்து இந்த நீதிமன்றம் விடுவிக்கிறது என்று அறிவித்தார்.

# பா.ம.கவுக்கு ஆறு தொகுதிகள் கருணாநிதியுடனான பேச்சில் முடிவு


தி.மு.க. கூட்டணியில் டொக்டர் ராமதாஸ் தலைமையிலான பா.ம.க இடம்பெற்றுள்ளது. இந்தக் கட்சிக்கு நாடாளுமன்றத் தேர்தலில் 6 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதற்கான உடன்பாடு நேற்று ஏற்பட்டது. இதில் தி.மு.க தலைவர் கருணாநிதியும், டொக்டர் ராமதாசும் கையெழுத்திட்டனர். இது குறித்து நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது

ஏப்ரல், மே நடைபெறவுள்ள 14-ஆவது நாடாளுமன்றத் தேர்தலில், திராவிடமுன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதியும், பாட்டா ளிமக்கள் கட்சி நிறுவனத் தலைவர் டொக்டர் ராமதாசும் தொகுதி உடன்பாடு குறித்து கலந்து பேசி, ஆறு நாடாளுமன்றத் தொகுதிகளுடன், இவ்வாண்டில் நடைபெறவுள்ள மாநிலங்களவைத் தேர்தலில் ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவியும் பா.ம.கவிற்கு பங்கிட்டுக் கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

தர்மபுரி, பாண்டிச்சேரி, செங்கல்பட்டு, சிதம்பரம், திண்டிவனம், வேலூர் அல்லது அரக்கோணம் இவற்றுடன் மாநிலங்களவை உறுப்பினர் பதவி என்பன அடங்கும் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோல் அந்தக் கூட்டணியில் இடம்பெற்றுள்ள ம.தி.மு.க, தாம் கடந்த தேர்தலில் போட்டியிட்ட ஐந்து தொகுதிகள தமக்கு ஒதுக்கப்பட வேண்டும் என கோரிவருகிறது. ஆனால், 4 தொகுதிகளை ஒதுக்க தி.மு.க முன்வந்துள்ளது. ம.தி.மு.கவுக்கு ஒதுக்கப்படும் தொகுதிகள் விவரம் வருமாறு. சிவகாசி, பழனி, திருச்செங்கோடு, பொள்ளாச்சி. திண்டிவனம் தொகுதியை பா.ம.க கேட்பதால் அத்தொகுதி அக்கட்சிக்கு மாறும் என்று தெரிகிறது.

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.



நேற்றுமுன்தினம் கும்பாபிஷேகம் நடைபெற்ற இணுவில் கந்தசுவாமி கோவிலின் தெற்கு வாசல் இராசகோபுரத்தை படத்தில் காணலாம்.

# தொல்பொருட்களை அடையாளப்படுத்திக்கொள்ள பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்

## வரலாற்றுத்துறை முதுநிலை விரிவுரையாளர் தெரிவிப்பு

தொல்பொருட்களை அடையாளபடுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என யாழ்.பல்கலைக் கழக வரலாற்றுத்துறையின் முதுநிலை விரிவுரையாளர் பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராஜா தெரிவித்தார்.

தொல்பொருட்கள் கண்டெடுக்கப்படக்கூடிய இடங்கள் பல - மக்கள பயன்பாட்டிற்குட்பட்டு அடையாளம் இழந்து வருவது குறித்து நமது ஈழநாட்டிற்கு அவர் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்.மாவட்டத்திலும் வன்னிப் பிராந்தியம் போன்று பரந்துபட்ட அளவில் தொல்பொருள் எச்சங்கள் ஆங்காங்கே புதையுண்டுகிடக்கின்றன. அவற்றைக் அடையாளப்படுத்த வேண்டிய பாரியபொறுப்பு யாழ்.மக்களுக்கே உரியது.

பொதுமக்களின் அசட்டையீனத்தால், பல்வேறு இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருட்கள் மற்றும் தொல்பொருட் சின்னங்கள் என்பன வீணடிக்கப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்படாமல் போயுள்ளன.

கடந்த வாரம் நாகர் கோயில் பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்டவர்களினால் பாரிய தாழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. மணல் அகழ்வின் பின் நில மட்டத்திற்குக் கீழே தோண்டியவேளையிலேயே இது வெளிப்பட்டிருக்கிறது.

ஆனாலும், மணல் எடுக்கச்சென்றவர்கள் தமது வேலையை மட்டும் முடித்துவிட்டுச் செல்லும் எண்ணத்துடன், அத்தாழியை உடைத்துநொறுக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

இதனால், அப்பகுதியில் கிடைகக்கூடிய பல அரிய தடயம் ஒன்று வீணடிக்கப்பட்டுள்ளது. இதேபோல் ,எமது காதுகளுக்கு எட்டாத, நாம் காணாதவகையில் பல்வேறு சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

இவ்வாறான செயல்களால் எமது கலாசாரம், வரலாறு பற்றிய அரிய தடயங்களை நாம் இழக்கநேரிடுகின்றமையை அனைவரும் மறந்து விடக்கூடாது.

அவவாறு ஓர் வரலாற்றுத் தொன்மையுடைய சின்னத்தையோ, தொல்லியல் சான்றையோ கண்டறிந்தால்- அது பற்றிய தகவலை யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறையுடன் தொடர்புகொண்டு எமக்கு அறியத் தருவதினூடாக, அவைபற்றிய விளக்கத்தை அனைவரும் அறியக்கூடியதாக அமையும். இவ்வாறான வரலாறுப் பார்வை எல்லாத் தமிழ்மக்கள் மத்தியிலும் உருப்பெறவேண்டும். அப்போதுதான எதிர்காலம் எம்மை வாழ்த்தும் என அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# யு.என்.எச்.சி.ஆர். பணிகளுக்கான 30 மில்லியன் ரூபா கிடைக்கவில்லை

## பணிகள் முடங்கும் ஆபத்து தோன்றியுள்ளது

யாழ். மாவட்டத்தின் புனரமைப்புப் பணிகளுக்கென அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையில், 30 மில்லியன் ரூபா கிடைக்கப்பெறாதுள்ளமையால், அதன் பணிகள் முடங்கும்நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இந்த நிறுவனத்தின் புனரமைப்பு பணிகளுக்காக 112 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. அவை யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த மக்களின் மறுவாழ்வு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுவருகின்றபோதிலும், அப்பணத்தின் முழுத்தொகையில் 82 மில்லியன் ரூபா மட்டுமே யாழ். அலுவலகத்திற்குக் கிடைக்கப்பெற்று, செலவிடப்பட்டது. மிகுதி 30 மில்லியன் ரூபாவும் கடந்த ஆண்டே கிடைததிருக்கவேணடியநிலையில், இதுவரையில் அப்பணம் யாழ். செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்படவில்லை.

இதனால், தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் வீடமைப்பு நடவடிக்கைகள், மற்றும் மலசலகூட அமைப்புக்கள் என்பன தொடர்ந்தும் முன்னெடுக்கப்படமுடியாதநிலையில் உள்ளது. தொழிலாளிகளுக்கான சம்பளம் வழங்குதல், பொருட்களை வழங்குகின்ற முகவர்களுக்கான கொடுப்பனவைச் செலுத்துதல் முதலானவற்றை மேற்கொள்வதற்கு மிகவும் சிரமமானநிலை தோன்றியுள்ளது.

இந்த ஆண்டுக்குரிய வேலைத் திட்டங்கள் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவேண்டியநிலையில, கடந்த ஆண்டுக்குரிய வேலைத்திட்டங்கள் நிதி நெருக்கடியால் தாமதமடைவது, புதிய வேலைத்திட்டங்களை மேற்கொளவதற்குப் பெரும் பாதிப்பாக அமையும் என யாழ். செலயக வட்டாரங்கள் தெரிவித்தன. (ப)

# சட்டவிரோத மது விற்பனையில் ஈடுபட்ட நால்வருக்கு 76 ஆயிரம் ரூபா அபராதம்

## யாழ்.நீதிமன்றம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட நால்வருக்கு நேற்றுமுன்தினம் யாழ். மாவட்ட நீதிமன்றம் 76 ஆயிரம் ரூபா அபராதமாக விதித்துள்ளது.

சட்டவிரோதமுறையில் அனுமதியின்றி மதுபான விற்பனையில் ஈடுபட்டவர்களான - உரும்பிராய் அன்னங்கையைச் சேர்ந்த இருவருக்கு தலா 20 ஆயிரம் ரூபா குற்றப் பணமும், ஐயாயிரம் ரூபா தர்மப் பணமும் அபராதமாகச் செலுதது மாறு உத்தரவிடப்பட்டது.

இதேபோல், இரு வெவ்வேறு கசிப்பு .வழக்குகளில் சம்பந்தப்பட்டோருக்கும் அபராதம் விதிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா குற்றப்பணமும், மூவாயிரம் ரூபா தர்மப்பணமும் அபராதமாக விதிக்கப்பட்டது. (ப)

# பத்திரிகையாளர்கள் தாக்கப்படுவது தொடர்ந்தவண்ணமே உள்ளது

## நேபாள பத்திரிகையாளர்களிடம் தெரிவிப்பு

'அவசரகாலச்சட்டம் அமுல்படுத்தப்பட்ட காலம் தொடக்கம், பத்திரிகையாளர்கள் தாக்கப்படுவதும், அச்சுறுத்தப்படுவதும் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன'. இவ்வாறு வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் காலை யாழ்.பஸ்தியன் விடுதியில் இடம்பெற்ற நேபாள பத்திரிகையாளர் குழுவினருடனான சந்திப்பின்போதே, அவர்கள் இதனை எடுத்துக் கூறியுள்ளனர். சந்திப்பில் கலந்துகொண்ட பத்திரிகையாளர்கள்- இலங்கையின் வடபகுதி பத்திரிகையாளர்களின் உரிமைகளுக்காகவும், நலன்களுக்காகவும் நேபாள பத்திரிகையாளர்கள் குரல் கொடுக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டனர். தொடர்ச்சியாகப் பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டு வந்ததின் உச்ச எல்லையாக, பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டமையை குறிப்பிடமுடியும் எனத் தெரிவித்த யாழ். பத்திரிகையாளர்கள், தாம் எதிர் நோக்கும் சவால்கள் தொடர்பாகவும் நேபாளப் பத்திரிகையாளர் குழுவிற்கு விளக்கிக் கூறியிருந்தனர். (111)

# பழைய, நவீனமுறைகளை இணைத்து பிரயோகிப்பதே எமது விவசாயிகளுக்குப் பொருத்தமாக அமையும்

## ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் தெரிவிப்பு

பழைய முறைகளையோ அல்லது அதிநவீன தொழில்நுட்ப முறைகளையோ பாவிப்பது எமது விவசாயிகளுக்கு கடினமாகவுள்ளது. அதனால, இரண்டு முறைகளையும் இணைத்து புதியதொரு முறையாகப் பாவிப்பதே எமக்குப் பொருத்தமானதாக அமையும என ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் எஸ். சுந்தரேஸ்வரன் தெரிவித்தார்.

அளவெட்டியில் நடைபெற்ற தூவல் நீர்ப்பாசன அறிமுக விழாவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், எமது விவசாயிகள் மிகுந்த பொருளாதார கஷ்டத்தின் மத்தியிலேயே செயற்பட்டு வருகின்றார்கள். உலகில் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட புரட்சிகளின் விளைவாக, விவசாயத்துறையிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன.

கைத்தொழில் புரட்சி, பசுமைப் புரட்சி என்பன விவசாயத்துறையில் அதிக தாக்கத்தை ஏற்படுத்திய புரடசிகளாகும். கைத்தொழில் புரட்சியின் மூலம் பல புதிய விளைவுகள், தொழிநுட்பங்கள் விவசாயத்திலே புகுத்தபபட்டன. ஆனால், அவற்றால் சூழலுக்குப் பல தீமைகள் ஏற்பட்டுள்ளன என்பது கவனிக்கத்தக்க விடயமாகும.

எமது விவசாயிகளைப் பொறுத்தவரையிலே, அவர்கள் அதிநவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த முடியாதுள்ளது. அதற்காக மிகப் பழமையான முறைகளையே தொடர்ந்தும் பயன்படுத்தமுடியாது. இதனால், அவ்விரு முறைகளையும் இணைத்துப் பயன்படுத்துவதன்மூலம் அதிக விளைச்சலைப் பெறமுடியும்.

வங்கிகள் எனும்போது, நாம் இலாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செயற்படமுடியாது. தனியே மக்களைச் சுரண்டி எம்மை வளப்படுத்திக்கொள்ள நாம் விரும்பவில்லை. ஹற்றன் நஷனல் வங்கியைப் பொறுதவரையிலே, சமூக முன்னேற்றத்திலும் பங்காற்றத் தயாராகவுள்ளது. அந்த தார்மீகக் கடமையிலிருந்து விலக நாம் விரும்பவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு மானிய அடிப்படையிலும், குறைந்த வட்டி வீதத்திலும் வங்கிக் கடனைக் ஹற்றன் நஷனல் வங்கி வழங்கி வருகின்றது. தற்பொழுது இரிடெக் எனும் தனியார நிறுவனத்துடன் இணைந்து தூவல் முறை எனும் நீர்ப்பாசனத்தையும் குடாநாட்டு விவசாயிகளுக்கு அறிமுகம் செய்துவைத்துள்ளது.

இந்த நிகழ்வில் விவசாயத் திணைக்களம், மற்றும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றுக்கு தனது நன்றிகளையும் அவர் தெரிவித்துக் கொணடார். பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையினால், விவசாய பொருட்களுக்கான வரிவிதிப்பு அமுலிலிருந்த காலப்பகுதியில், தூவல் நீர்ப்பாசன பொருட்களுக்கான வரி விலக்கு அளிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச)

### புனித செபஸ்ரியார் திருநாள்

ஓட்டுமடம் புனித செபஸ்ரியார் கோயில் வருடாந்த திருநாள் திருப்பலி இன்று காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

திருநாள் திருப்பலியைத் தொடர்ந்து புனிதரின் திருச சொரூபப் பவனியும் இடம்பெறவுள்ளது.

# லயன்ஸ் கழகம் நடாத்தும் கண் சிகிச்சை முகாம்

லயன்ஸ் கழகங்கள் பிராந்தியரீதியாக இணைந்து நடாத்தும் இலவச கண்சிகிச்சை முகாம் - நாளை நடைபெறவுள்ளது. ஏழாலை மேற்கு மகா வித்தியாலயத்தில் காலை 9 மணி முதல் நடைபெறவுள்ள இந்த மருத்துவ முகாமில், விழிவெண்படலம் பாதிப்புற்றோருக்கான சிகிச்சைகளே மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கண்பரிசோதனை முகாமில் யாழ்.போதனா வைத்தியசாலை கண்சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.குகதாஸன் - நோயாளர்களைப் பார்வையிடவுள்ளார். இந்த சிகிச்சை முகாமில் அடையாளம் காணப்படும் நோயாளிகளுக்கு, யாழ்.போதனா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், நோயாளிகளுக்கான கண்வில்லைகளும் குறைந்த செலவில் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன.

## சின்னஞ் சிறு செய்திகள்

### புதிய நிர்வாக சபை தெரிவு

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்திற்கு, புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். புதிய நிர்வாக சபை தலைவராக குணமணி சண்முகதாசும், செயலாளராக ப.காண்டீபனும், பொருளாளராக சி.சிவகுமாரனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

புலமைப்பரிசில் நிதியக்குழுவுக்கு - கல்லூரி அதிபர் ந்ா.வன்னியசிங்கம் தலைமையில் ஆறு பேர் கொண்டகுழுவொன்று தெரிவுசெயயப்பட்டது (91)

### பொன்விழா ஆண்டு போட்டிகள்

வண்ணை சாந்தையர்மடம் கற்பக விநாயகர் கோயில் சைவ சமய அபிவிருத்திக் கழக பொன்விழாவை முன்னிட்டு, சமய அறிவுப் போட்டியொன்றை நடாத்தவுள்ளது. அத்துடன், பாடசாலை மாணவர்களிடையே சமய நாடகம், திருமுறை மனனம், புராண படனம், பண்ணிசை, கதாப்பிரசங்கம் ஆகிய துறைகளிலும் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகளுக்கான விண்ணப்பமுடிவுத் திகதி - எதிர்வரும் 3 ஆம் திகதியாகும். பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தமது பாடசாலையூடாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்கும்படி கேடகப்பட்டுள்ளனர்.

### சமாதானத்தை வலுப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

சமாதானத்தை வலுப்படுத்தல் எனும் தலைப்பில் இராஜயோகினி மீரா நாகானந்தா, இன்று உரையாற்றவுள்ளார். காலை 9.30 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்திலே நடைபெறவுள்ள நிகழ்வொன்றிலேயே இவர் உரையாற்றவுள்ளார்.

பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தின் சார்பில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் புஸ்பாஞ்சலி நடனமும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### நற்கருணைப் பணியாளர் நியமனம்

பொதுநிலையிலுள்ள மூவர் நற்கருணைப் பணியாளர்களாக நியமிக்கப்படவுள்ளனர். இது தொடரபான சடங்குகள் நாளை காலை 6.30 மணிக்கு யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்தில் நடைபெறவுள்ளன.

ஜே.இ.இராசநாயகம், எஸ்.பெனடிக், ஏ.எஸ்.அகஸ்ரின் ஆகியோரே நற்கருணை பணியாளர்களாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர். யாழ்.ஆயர் தோமஸ்சவுந்தரநாயகம் ஆண்டகை இந்த நிகழ்வில் கலந்து, சடங்குகளை நிறைவேற்றவுள்ளார்.-

## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

# செனகல்

| | |
|---|---|
| நாட்டின் பெயர் | - செனகல் குடியரசு. |
| மக்கள் தொகை | - 10 மில்லியன். |
| தலைநகரம் | - டக்கர் |
| மக்கள் இனங்கள் | - வொலொப், புலானி, செனார், ருகோலியர், டயோலா, மன்டின்கோ, ஐரோப்பியர்கள, லெபனிஸ். |
| மொழி | - பிரன்ஸ், வொலொப், பூலார், டியோலா, மண்டின் கோ. |
| மதம் | - இஸ்லாம், கிறீஸ்தவம். |

தென்னாபிரிக்காவில் செனகல் ஒரு உஷ்ணவலய நாடு. இந்த நாட்டின் சரித்திரம் 8 ஆவது நூற்றாண்டிலிருந்து ஆரம்பமாகியது. 1500 ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் போர்த்துக்கேய வர்த்தகர்கள் இந்த நாட்டில் குடியே றினார்கள். பின்னர், பிரித்தானியா, பிரான்ஸ் ஒல்லாந்து நாட்டவர்களால் ஆட்சிசெய்யப்பட்டது. 19 ஆம் நூற்றாண்டில் பிரான்ஸின் கட்டுப்பாட்டின்கீழ் முழுநாடும் கொண்டுவரப்பட்டது.

'டக்கர்' என்பதே இதன் தலைநகரமாகும். செனகல் - பிரான்ஸின் ஆட்சிக்கு உட்பட்டு சூடானுடன் இணைந்து, மாலிக் குடியரசாகச் செயற்பட்டது. 1960 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது. இரு மாதங்களில் மீண்டும் பிரிந்துகொண்டது. பின்னர் செனகல் குடியரசாகத் தன்னைப் பிரகடனப்படுத்திக்கொண்டது. 1989 ஆம் ஆண்டிலிருந்து உள்நாட்டுக் குழப்பங்கள் தொடர்ந்தன. நூற்றுக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். இந்தப் போராட்டத்தினால் உல்லாசப் பிரயாணம் பாதிக்கப்பட்டது. இதனால், பொருளாதாரப் பிரச்சினைகள் தோன்றின. இன்றும் போராட்டங்கள் நடந்த வண்ணமே உள்ளன. இதனால், நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

செனகலின் ஆதிக்குடிகள் 'வொலொப்' (WOLOF) என அழைக்கப்படுகின்றனர். பாரம்பரிய, நவீன இசைகளுக்குச் செனகல் புகழ்பெற்றது. இந்த நாட்டு மக்கள் பழமையில் நம்பிக்கை கொண்டவர்கள். இந்த நாட்டினூடாக 3 ஆறுகள் ஓடுகின்றன. வடகரில் செனகல் ஆறும், ஒரு பாகத்தில் 'கம்பியா' என்ற ஆறும், தெற்கில் 'கசமன்ஷ்' ஆறும் ஓடுகின்றன. இங்கு பல பாலை நிலங்களும் காணப்படுகின்றன. தலைநகர் டக்கரில் அமைந்துள்ள அருங்காட்சியகத்தில் வினோதமான முகமூடிகள், சிலைகள், இசைக்கருவிகள், பழமையான விவசாய் உபகரணங்கள் என்பன காணப்படுகின்றன.

**முக்கிய தொழில்கள்** - விவசாயம், மீன்பிடித்தல், மீன் பதனிடுதல், பொசுபேற்று அகழ்தல், பெற்றோலியப் பொருட்கள் உற்பத்தி, கட்டடப்பொருட்கள் உற்பத்தி.

**சிந்தனைக்கு!**

அள்ளிக்கொடுத்தால் சும்மா, அளந்து கொடுத்தால் கடன்



# சிறுவர் அரங்கம்

அன்புச் சிறுவர்களே!

உங்கள் பகுதியான இந்த சிறுவர் அரங்கத்தில் உங்களின் தரமான ஆக்கங்கள் வெளிவருவதே சிறப்பான விடயம். எனவே, சிறுவர்களே உங்கள் எண்ணங்களில் தோன்றுபவற்றையும், நீங்கள் படித்துச் சுவைத்த அம்சங்களையும், புதுமையான விஞ்ஞானத் தகவல்களையும் சிறுவர் அரங்கப் பகுதிக்காக எழுதி அனுப்புங்கள்.

இளந்தேனீக்கள் கழக அங்கத்தவர்கள் படிவங்களைப் பூர்த்திசெய்து அனுப்பும்போது, தெளிவான கையெழுத்தில் எழுதி அனுப்புங்கள். குறிப்பாக நீங்கள் கல்வி கற்கும் பாடசாலையின் பெயரை முழுமையாக, தெளிவாக எழுதி அனுப்புங்கள். அப்போதுதான் அங்கத்தவர் படிவங்களை தெளிவான முறையில் பிரசுரிக்கமுடியும். நீங்கள் வரைந்து அனுப்பும் ஓவியங்களை, கோட்டுத்தாளில் வரையாது, வெள்ளைத்தாளில் வரைந்து அனுப்புங்கள். உங்கள் பெயரை வேறாக எழுதி இணைத்து அனுப்புங்கள்.

பாசமுடன் -சாரு அக்கா

## விடுகதைகளும் விடைகளும்

1. ஏறிய மனிதனுக்கு, இறங்கத் தெரியாது. அவன் யார்?
2. பணம் எதுவும் இன்றி ஊசிபோடுவான். அவன் யார்?
3. வெள்ளை மனிதனுக்கு, கறுத்த தலைப்பாகை. அவன் யார்?
4. செம்பு நிறைய முத்துக்கள். அது என்ன?
5. சிரித்தால் சிரிப்பேன், அழுதால் அழுவேன். நான் யார்?

### விடைகள்

1. வயது
2. நுளம்பு
3. தீக்குச்சி
4. மாதுளம்பழம்
5. தளவாடி

சி.சிந்துஜா
தரம் - 6
கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.



## இளந்தேனீக்கள் கழகம்
## அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- சி.கிசோத்
கற்கும் பாடசாலை :-
கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலயம்
தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
வரைதல்.



முழுப்பெயர் :- ந.நிதர்சன்
கற்கும் பாடசாலை :-
யாழ்ப்பாணக் கல்லூரி
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலி கேட்டல்,
தொலைக்காட்சி பார்த்தல்

முழுப்பெயர் :- த.நிரோஜினி
கற்கும் பாடசாலை :-
குடத்தனை அ.மி.த.க.பாடசாலை
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
தொலைக்காட்சி பார்த்தல்,
வானொலி கேட்டல்

முழுப்பெயர் :- அ.பிறின்சிஸ்
கற்கும் பாடசாலை :-
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
கிரிக்கெட்,
தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :- கு.துஷாந்தி
கற்கும் பாடசாலை :-
சாவகச்சேரி இந்துக் கல்லூரி
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
கட்டுரை, கவிதை எழுதுதல்,
புத்தகங்கள் வாசித்தல்.

முழுப்பெயர் :- கு.அஜந்தினி
கற்கும் பாடசாலை :-
சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள்:
வாசிப்பு, கட்டுரை,
கவிதைகள் ஆக்கம்.

முழுப்பெயர் :- பா.மாதங்கி
கற்கும் பாடசாலை :-
சாவகச்சேரி மகளிர் பாடசாலை
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
நடனம், பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர் :- வீ.விதுர்ஷனா
கற்கும் பாடசாலை :-
வேதாரணியேஸ்வரா வித்தியாலயம்
தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், பொது அறிவு,
கணிதம்.

முழுப்பெயர் :- அ.கிறிஸ்காடிலானி
கற்கும் பாடசாலை :-
வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்
தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
கதைப்புத்தகம் வாசித்தல்,
விளையாட்டு.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.
இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.
நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.
கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :...........................................
கற்கும் பாடசாலை :...........................................
கற்கும் தரம் :...........................................
வீட்டு முகவரி :...........................................
பிறந்த திகதி :...........................................
ஆர்வமுள்ள துறைகள் :...........................................

........................ திகதி ........................ ஒப்பம்

........................ அதிபர்/ஆசிரியர் ஒப்பம் ........................ பெற்றோர் ஒப்பம்

# உங்கள் கைவண்ணம்



த.திவாகரன்
தரம் - 4
கோப்பாய் நாவலர் வித்தியாலயம்



க.கௌரி
தரம் -9
பளை மத்திய கல்லூரி.

## விந்தையான எண்கள்

11x11 = 121
111x111 = 12321
1111x1111 = 1234321
11111x11111 = 123454321
111111x111111 = 12345654321
1111111x1111111 = 1234567654321

## உங்களுக்குத் தெரியுமா?

1. ஒரு அடி எடுத்து வைக்க உடலெங்கும் எத்தனை தசைகள் பணிபுரியவேண்டியுள்ளன? - 54 தசைகள்
2. சங்கைக் காதில் வைத்தால், கேட்கும் ஒலி எதனால் என்பது தெரியுமா? - எமது காதின் இரத்த ஓட்டத்தின் எதிரொலிதான் அது.
3. எந்த மரங்களுக்கு மிகநீண்ட வேர்? அத்திமரம், சிந்தூரமரம்.

ச.சிசிகேசனி
தரம் - 8


# My Pet

I have a pet parrot. I call her Piriya. It's two bright eyes, a red beak and green body. It's love fruits and vegetables. I play with her in the evenings. Piriya is my best friend. My pet can speak. I give her a wash every sunday. It's sleeps near my bed. I love my pet.

S.Thirshanthiny
Grade - 8
Kilinochchi Maha Vidyalayam.

# சந்தேகம் - விளக்கம்


**தண்ணீரைக்கொதிக்க வைத்து ஆறவைத்துக் குடித்தால் அதில் இயற்கையாகவுள்ள சத்துக்கள் அழிந்துவிடும் என்பது உண்மையா?**



ஓரளவுக்கு இது உண்மையானதுதான். தண்ணீர் மட்டுமல்ல, எந்தவொரு உணவுப்பொருளும் வெப்பத தாலும், நீராவியாலும் சிறியளவில் சத்துக்களை இழப்பது உண்மை. ஆனால், தண்ணீரைப்பொறுத் தவரையில் அதைக் கொதிக்கவைத்து, ஆறவைத்துக் குடித்தாலும் - எமக்குத் தேவையான சத்து அதிலிருந்து கிடைத்துவிடும். சுகாதாரம் குறைந்துசெல்லும் நமது நாட்டில் தண்ணீர் மூலம் பல தொற்றுநோய்கள் பரவுகின்றன. நீர் மூலம் பரவும் நோய்களைத் தடுக்கவேண்டுமானால்; கட்டாயம் கொதித்தாறிய நீரையே நாம் பருகவேண்டும்.

# இணையுங்கள்

பென்சிலை எடுத்துக் கொள்ளுங்கள். 1-34 வரையான எண்களை கைவிடாது இணையுங்கள். உங்களை ஒரு உருவம் பார்த்துச் சிரிக்கின்றதா?



சென்றவார விடை
சுதன்

# கருவாடு சாப்பிடும் மீன்



மீன் கருவாடு சாப்பிடுமா? சாப்பிடும். 'ட்ரவுட்' **(Trout)** என்ற மீன் கருவாடு சாப்பிடும். இந்தியாவில்- காஷ்மீர் உதகமண்டலம், இலங்கையில் - நுவரெலியா **(worldsend)** ஆகிய இடங்களில் இந்த மீன் காணப்படுகிறது.

இந்த மீன் நியூசிலாந்தைச் சேர்ந்தது. குளிர்ப் பிரதேசத்தில் வாழும் இந்த மீன்களை ஆங்கிலேயர்களே இந்தியாவிலும், இலங்கையிலும் அறிமுகம் செய்தனர். இந்த மீன்குஞ்சுகள் - வளர்ந்த பின்னரே நன்னீர் ஓடைகளில் விடுகிறார்கள். இந்த மீன் குஞ்சுகளுக்கு அவித்த கோழிமுட்டை மஞ்சள் கருவும், 60 தினங்களின் பின்னர் கருவாடும் உணவாகக் கொடுக்கப்படுகின்றது. நீர் வீழ்ச்சிகளிலும் செங்குத்தாக மேல்நோக்கி ஏறக்கூடிய வலிமை படைத்தது இந்த மீன்.



# பேராசை

நந்தியூர் என்ற கிராமத்தில், கண்ணன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவன் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன்தான் என்றாலும், பேராசை அதிகம்.



ஒருநாள் அவன் வெளியூருக்குச் சென்றுவிட்டு, பேருந்தில் திரும்பிக்கொண்டிருந்தான். அப்பொழுது அவன் அருகில் ஒரு சிறிய பொதி கிடந்தது. கண்ணன் அதை எடுத்துப் பிரித்துப் பார்த்தான். அதனுள் பத்து பவுண் எடையுள்ள ஒரு தங்கச் சங்கிலி தகதகவென மின்னியது. உடனே அவன் தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்று சுற்றும் முற்றும் பார்த்தான். யாரும் கவனிக்கவில்லை. அவனுக்கு அருகில் அமர்ந்திருந்தவனும் ஏதோ சிந்தனையில் இருந்தான். உடனே கண்ணன் அந்த சங்கிலியைத் தன் கைப்பைக்குள் பத்திரப்படுத்திக்கொண்டான்.

அவன் இறங்கவேண்டிய இடம் வந்ததும் இறங்கி - செல்ல வேண்டிய இடத்திற்கு நடந்து சென்றுகொண்டிருந்தான். அவனை யாரோ பின்னால் கைதட்டி அழைப்பதுபோல் இருக்கவே, திரும்பிப்பார்த்தவன் அதிர்ந்தான். பேருந்தில் அவனுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தவன் அருகில் நின்றிருந்தான்.

" நீங்கள் பஸ்ஸிலிருந்து 10 பவுண் தங்கச் சங்கிலியை எடுத்தது எனக்குத் தெரியும். அதனாலே, அதில் பாதியை எனக்குக் கொடுத்துவிடுங்கள்" என்று கூறினான். கண்ணன் மௌனமாக இருக்கவே "சரி நீங்கள் பாதியை எனக்குக் கொடுக்கவேண்டாம், கழுத்தில் போட்டிருக்கும் சங்கிலியையும், மோதிரத்தையும் எனக்குக் கொடுத்து விடுங்கள். நான் இந்த விடயத்தைப் பற்றி வெளியில் யாருக்கும் சொல்லமாட்டேன்" என்று கூறினான். கண்ணனும் தனக்குப் பத்து பவுண் கிடைக்கிறதே என்ற ஆசையில், அனைத்தையும் கழற்றிக் கொடுத்துவிட்டான். அவனும் அதை வாங்கிக் கொண்டு சென்று விட்டான்.

வீட்டிற்குச் சென்றதும் முதல் வேலையாக நகைத்தொழிலாளரிடம் அதை கொடுத்து,



சோதனைசெய்து பார்க்கச்சொன்னான். அப்பொழுது கண்ணனுக்கு ஒரு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது. ஆம்! அந்த தங்கச் சங்கிலி போலி என்று தெரிந்தது. பத்து பவுணுக்கு ஆசைப்பட்டு தன்னுடைய இரண்டு பவுண் சங்கிலியையும் இழந்துவிட்டேன். பேராசை பெரு நஷ்டமாக இருந்தது.

# நீர்வீழ்ச்சிகள்

| பெயர் | நாடு | உயரம் (m) |
|---|---|---|
| ஏஞ்சல் | - வெனிசுவெலா | - 979 |
| யோசிமிட் | - அமெரிக்கா | - 739 |
| தென்மர்டால் | | |
| சபோசன் | - நோர்வே | - 655 |
| துகேலா | - தென்னாபிரிக்கா | - 614 |
| குகேனன் | - வெனிசுவெலா | - 610 |
| சதர்லாந்து | - நியூசிலாந்து | - 580 |
| றிப்பன் | - அமெரிக்கா | - 491 |
| கிரேட்கமெரங் | - கயானா | - 488 |
| வடமர்டால் | | |
| சபோசன் | - நோர்வே | - 468 |
| டெலா | - கனடா | - 440 |
| காவர்னீ | - பிரான்ஸ் | - 422 |
| ஸ்கேகேடல் | - நோர்வே | - 420 |
| கிளாஸ் | - பிரேசில் | - 404 |

# நிறங்களின் அலைநீளம்

| நிற ம் | நீளம் | (nano metre) |
|---|---|---|
| ஊதா - | -370 | - 400 |
| நீலம் - | 440 | - 500 |
| பச்சை - | 500 | - 575 |
| மஞ்சள் - | 575 | - 580 |
| ஒரேஞ் - | 580 | - 610 |
| சிவப்பு - | 610 | - 720 |

# அடிப்படை அலகுகள்

சர்வதேச அளவில் 7 அலகுகளை அடிப்படை அலகுகளாக (SI - System International d' units) நிர்ணயித்துள்ளனர். இந்த உலகிலுள்ள அனைத்தையும் இந்த அலகுகள் மூலம் அளவிடு செய்து விடமுடியும். தற்போது நிலவிவரும் அனைத்து அலகுகளும் இந்த ஏழுவகை அலகுகளிலிருந்து உருவானவைதான்.

| அளவு | குறியீடு | அலகு |
|---|---|---|
| நிறை | Kg | கிலோகிராம் |
| நீளம் | M | மீற்றர் |
| நேரம் | S | செக்கன் |
| மின்சாரம் | A | அம்பியர் |
| வெப்பம் | K | கெல்வின் |
| லூமினஸ் | | |
| இன்டன்சிட்டி | CD | கன்டோலா |
| மூலப்பொருளின் | | |
| அளவு | mol | மூல் |

# விண்மீன்கள் (Stars)

16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரபஞ்சத்தின் விரிவாக்கத்தையும், அதில் காணப்படும் வியத்தகு பொருட்களையும் - கலிலியோ கலிலி கண்டுபிடித்தார். 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் - வில்லியம் ஹெர்ஷெல் **(William Hershel)** நமது அண்டமான பால்வழி மண்டலத்தை, மிகப்பெரிய தொலைநோக்கி கொண்டு கண்டறிந்து கூறினார்.

இப்பொழுது ஏற்பட்டுள்ள அறிவியல் வளர்ச்சி மற்றும் கருவிகளைக்கொண்டு - 8 மில்லியனுக்கும் மேலான அண்டங்கள் உள்ளதாக அறிவியலாளர் கருத்துரைத்துள்ளனர். இத்தகைய அண்டங்கள் ஒவ்வொன்றிலும் சுமார் 14,000 கோடி விண்மீன்கள் இருப்பதாகவும் கணித்துள்ளனர். "அடேயப்பா இவ்வளவு நட்சத்திரங்களா"? என்று ஆச்சரியமாக இருக்கின்றதா?

வாரநோக்கு

- யாழவன் -



# சந்திப்புகள், கலந்துரையாடல்கள், கேள்விக்குறிகள்.....

கடந்த வாரமும் பல சுவையான, முக்கியமான அம்சங்களை சந்தித்த பின்னர் கடந்து போய் இருக்கிறது. தென்னிலங்கையில் தளம்பல் நிலையில் தள்ளப்படும் அரசியலில், தற்போது ஏற்பட்டுள்ள ஜே.வி.பி. சுதந்திரக்கட்சி கூட்டு - புதியதொரு திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது. சிலவேளைகளில் இந்தக் கூட்டு சமாதானத்திற்கும் வேட்டு வைக்கலாம் என்ற அச்சமும் எழுந்திருக்கிறது.

இந்த அச்சத்தை மேலும் உறுதிப்படுத்துவதுபோல, புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கமும் தனது கருத்தை வெளியிட்டுள்ளார். ஜே.வி.பி - சுதந்திரக்கட்சி இடையேயான கூட்டானது, மீண்டும் ஒரு பாரியபோர் ஏற்பட வழிவகுக்கலாம். இதன் மூலமாகப் பல அழிவுகளைச் சந்திக்க நேரிடும் என்று கருத்து வெளியிட்டுள்ள பாலசிங்கம் - இன்னொரு கருத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

விடுதலைப்புலிகள் தான், தமிழ்மக்களுடைய ஏக மற்றும் அதிகாரபூர்வ பிரதிநிதிகள் என்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கும் எவருடனும், எங்கள் விடுதலை இயக்கம் பேச்சு நடத்தாது எனத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார். அத்தோடு, இன்னொரு கருத்தையும் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

"சாதாரண சிங்கள மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தி, தேர்தலில் அரசியல் அதிகாரத்தைப் பெறுவதையே இந்த அரசியல் ஒப்பந்தம் இலக்காகக் கொண்டுள்ளது. சமாதானத்துக்கும், இனசௌஜன்யத்துக்கும் கேடு விளைவிக்கும் சக்திகள்- அரசியல் அதிகாரத்துக்கு வரும்வகையில் வாக்களிக்கப்பட்டால், நேரக்கூடிய ஆபத்தான விளைவுகள் குறித்து சிங்கள் மக்களே கவனத்தில் கொள்ளவேண்டும்" என்பதே அந்தக் கருத்தாகும்.

இந்தக் கருத்தினுடைய ஆழம், அவசியம் சிங்கள மக்களால் உணரப்படவேண்டிய தேவை தற்போதுள்ள சூழ்நிலையிலே எழுந்துள்ளது. ஏனெனில், அண்மைக்காலமாக நடைபெற்றுவரும் சிலசம்பவங்கள் - தமிழர்கள் பக்கம் அவர்களது விடுதலைப் போராட்டத்தின் பக்கம், சர்வதேசம் எவ்வளவு கவனம் செலுத்துகிறது என்பதை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

இதனை உறுதிப்படுத்துவதுபோல கடந்த வாரம் கிளிநொச்சியில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. தமிழர் தாயகப் பிரதேசமான வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளவேண்டிய புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகள் தொடர்பாக இந்தச் சந்திப்பின்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

தமிழர்கள் அமைதியாக வாழ்வதிலே, இலங்கைத்தீவிலே நிரந்தர சமாதானம் ஏற்படுவதிலே - அக்கறையும், ஈடுபாடும் கொண்ட பல நாடுகளின் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பிலே கலந்துகொண்டனர். குறிப்பாகச் சொல்வதானால் - ஜே.வி.பி. சுதந்திரகட்சியினுடைய கூட்டு ஒப்பந்தத்திற்குப் பின்னணியில் நின்று செயற்படுவதாகக் கருதப்படும் இந்தியாவும், அவ்வப்போது ஆமிரேஜ் வாயிலாகப் புலிகளை அச்சுறுத்திவரும் இரட்டை வேடதாரி அமெரிக்காவுமே இந்தச் சந்திப்பிலே கலந்துகொள்ளவில்லை.

இந்தச் சந்திப்பின்போது - விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை பூரணமாகத் தெளிவுபடுத்தியுள்ளார்கள். தமிழர்களுடைய விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாட்டையும், சர்வதேச சமூகம் தற்போது புரிய ஆரம்பித்துள்ளது. இது விடுதலைப்புலிகளுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழினத்திற்குமே கிடைத்துள்ள பெரு வெற்றியாகும்.

அந்த வெற்றியின் பின்னேயே, கிளிநொச்சியில் கடந்தவாரம் இந்த முக்கியமான சந்திப்பு நடைபெற்றுள்ளது. போரின் காரணமாகப் பொலிவிழந்து முற்றாக தன்னுடைய சுயத்தைத் தொலைத்து நிற்கும் வடக்கு- கிழக்கை கட்டியெழுப்பச் சர்வதேசம நிதியுதவி அளிக்க முன்வந்திருக்கிறது.

சமாதானத்திற்கான பயணத்தை தொடர்ந்துகொண்டு, அதன்மூலம் சர்வதேசத்திடம் கையேந்தி, கிடைக்கும் நிதியைப் பயன்படுத்தி, தென்னிலங்கையை மேலும் அபிவிருத்தி செய்வதிலேயே - ஆட்சியிலுள்ள அரசுகளாயினும் சரி, இனி ஆட்சிக்கு வரப்போகும் அரசுகளாயினும் சரி குறியாகவுள்ளன. இதுவே கடந்தகாலங்களில் நடைபெற்று வந்த வரலாற்று உண்மையாகும்.

இந்த நிலைப்பாட்டை, இந்த முறையும் ஏற்றுக்கொள்ளத் தமிழர் தரப்பு தயாராகவில்லை. இதனாலேயே நேரடியாக சர்வதேச தரப்புடன் தொடர்புகளை மேற்கொண்டுள்ளது.

தமிழர்களுடைய ஏக பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை உள்நாட்டு அரசியல்வாதிகள் சிலர் ஏற்றுக்கொள்ள மறுத்தாலும், சர்வதேசம் ஓரளவுக்காவது அதனை ஏற்றுக்கொண்டுள்ளது. இதனாலேயே, புலிகளின் அழைப்பை ஏற்று, வன்னிக்கு வந்து, அபிவிருத்தி விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

தென்னிலங்கை அரசியலிலே காலங்காலமாக நடைபெற்றுவரும் அதிகார போட்டிகளும், இழுபறிகளும் தற்போதைய சூழ்நிலையில் சர்வதேசத்தின் தீவிர கண்காணிப்புக்கு உள்ளாகியுள்ளது. இதனை கிளிநொச்சி சந்திப்புக்கூட ஒரு விதத்திலே வெளிப்படுத்தியுள்ளது.

அதாவது, சர்வதேச பிரதிநிதிகள் பலர், தென்னிலங்கை அரசியற் தலைவர்களுக்கிடையே எழுந்துள்ள அதிகாரப் பலப் பரீட்சையைவிட - நாட்டின் அபிவிருத்தியும், கட்டுமானமுமே அவசியமானது என்ற தமது நிலைப்பாட்டை ஊடகங்கள் வாயிலாக வெளியிட்டு வருகின்றனர். இந்தக் கருத்தியல் நிலைப்பாடு தமிழர்களுக்கு மிகுந்ததொரு பலத்தைப் பெற்றுக்கொடுப்பதோடு, சமாதான விரும்பிகளையும், சமாதானத் துரோகிகளையும் அடையாளப்படுத்தியுமுள்ளது.

இந்தநிலையில் வைத்துப் பார்த்தால் - கடந்த வாரம் கிளிநொச்சியில் நடைபெற்ற சந்திப்பானது, முக்கியமானதொன்றாகவே கருதப்படுகிறது. புலிகளைப் பயங்கரவாதிகள் எனவும், போர் வெறியர்கள் எனவும் உலகெங்கும் ஓடியோடிப் பிரச்சாரம் செய்த பலரது முயற்சி வீண் முயற்சியாகப் போய் விட்டது. உலகம் இன்று உண்மையை உணர ஆரம்பித்திருக்கிறது. இந்த ஆரம்பமானது நல்லதொரு முடிவை எட்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

இந்தச் சந்திப்பைவிட வழமையாக நடைபெற்றுவரும் சந்திப்புக்களின் வரிசையிலே, கடந்தவாரமும் குடாநாட்டின் இராணுவத் தளபதி முக்கியமான இரு பகுதியினரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். ஒரு பகுதியினர் படையினரால் கைது செய்யப்பட்டு, காணாமற்போனோரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தினர், மறுபகுதியினர் வலி.வடக்குப் பிரதேச பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் இந்த இரு பகுதியினரதும் பிரச்சினைகள் மிகவும் முக்கியமானவையாகவே கருதப்படுகின்றன.

காணாமற் போனோரின் பிரச்சினையைப் பலரும் தமது சுயஅரசியல் இலாபத்திற்காக பயன்படுத்திக்கொள்ள முனைவதுதான் மிகவும் வேதனையான விடயமாகும்.

அண்மையிலே, காணாமற்போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தினர் குடாநாட்டின் முக்கியமானதொரு அரசியல்வாதியின் அனுசரணையோடு கொழும்புக்குச் சென்றிருந்தனர். அங்கு நீதியமைச்சின் அலுவலகம் மற்றும் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகம் ஆகியவற்றுக்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்றையும் நடத்தியிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஜனாதிபதியை நேரடியாகச் சந்தித்து, கலந்துரையாடி, மகஜர் ஒன்றை சமர்ப்பிப்பதற்குமான ஏற்பாடுகளையும் மேற்கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை முன்னாள் தமிழ் அமைச்சரும், ஜனாதிபதியின் நெருங்கிய சகாவுமான டக்ளஸ் தேவானந்தா ஒழுங்கு செய்திருந்தார்.

ஆனால், இறுதி நேரத்திலே அவரது முயற்சியும் கைகூடாமல், காணாமற்போனோரின் பெற்றோர்களும், உறவினர்களும் ஏமாற்றமடைந்தனர். டக்ளஸின் நெருக்கம்கூட, தற்போது நொருங்கிப் போய்விட்டதோ என்று எண்ணும் அளவிற்கு ஜனாதிபதி நடந்துகொண்டார்.

ஒரு அறிக்கை மூலமாகவேனும் எதுவித செய்திகளையும் இவர்களுக்கு தெரிவிக்கவில்லை.

ஏதோ ஜனாதிபதியினுடைய ஊடகப் பேச்சாளர் ஹரிம் பீரிஸ் மட்டும் இவர்களை சந்தித்து ஆறுதல் கூறியுள்ளார். ஆனால், இந்த விடயத்தைக்கூட பெரிதுபடுத்தி, ஏதோ ஜனாதிபதியைச் சந்தித்து, காணமாற்போன பலரை உயிருடன் மீட்டுக்கொடுத்ததுபோல பத்திரிகைகளுக்குச் செய்திகளும், புகைப் படங்களும் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. பாவம் காணாமற்போனோரின் பெற்றோர்கள், பாதுகாவலர்கள் - பிள்ளைகளையும், கணவன்மார்களையும், சகோதரர்களையும் பறிகொடுத்துவிட்டு ஏங்கிநிற்கும் அவர்களை மூலதனமாகப் பாவித்து, சிலர் தமது அரசியல் வியாபாரத்தைத் தொடர்ந்தும் கொண்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு அவர்களை வரவழைத்தது போலவும், தமக்கு அவர்கள் மீது அக்கறையிருப்பதாகவும் காட்டிக்கொள்ளமுனையும் அரசியல்வாதிகளைப் பற்றி மக்கள் அறிவர். அவர்கள அமைச்சராக இருந்தபோதும், அவர்களது தலைவி அம்மணி சந்திரிகா ஆட்சியிலிருந்தபோதுமே, செம்மணியில் பலர் புதைக்கப்பட்டார்கள். சந்திக்குச் சந்தி வைத்து கைதுசெய்யப்பட்டு, சுற்றிவளைப் பின்போது பிடித்துச்செல்லப்பட்டவர்களே காணாமற்போயினர்.

ஆனால், அன்று மிகவும் நெருக்கடிமிக்க சூழ்நிலையிலே கிருஷாந்தியின் பாலியல் வல்லுறவுக் கொலையை கண்டித்து பாடசாலை மாணவர்களாலே முன்னெடுக்கப்பட்ட பகிஸ்கரிப்புப் போராட்டத்திற்கு எச்சரிக்கை விடுத்தும், பாடசாலை மாணவன் சஞ்சீவன் படுகொலை செய்யப்பட்டபோது, மௌனமாகவிருந்தும் எஜமானி விசுவாசத்தைத் திறம்பட வெளிப்படுத்தியவர்கள் இவர்கள்.

பின்னாளில் தமது அரசியல் இலாபத்திற்காக, காணாமற்போனோரின் விடயங்களை அமுக்குவதற்காக ஒரு சங்கத்தை அமைத்து, அதிலும் தமக்குச் சார்பானவர்களை தலைவர், செயலாளர்களாகப் போட்டு தமது அரசியல் வாழ்வை நகர்த்திச் வருகிறார்கள்.

இன்றும் அதேபின்னணியில் இந்த விடயத்தைக் கையாளமுனைவது வேதனையான விடயம். தமது சுயலாப அரசயலுக்காக, அப்பாவிப் பொதுமக்களின் உணர்வுகளை அடிமையாக்குவது அபத்தமான விடயமாகும்.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் காணாமற்போனோரின் மறியற் போராட்டத்தில் கலந்துகொள்வதற்காகக் காரில் போய் காத்திருந்துவிட்டு, திரும்பிப்போன சம்பவமும் கொழும்பில் நடைபெற்றுள்ளது. இவர்களது பாணியிலேயே யாழ். மாவட்டதளபதி சந்திரபாலாவும் தனது காயை நகர்த்த முனைகிறார்.

கடந்த வாரம் காணாமற்போனோரின் பெற்றோர், பாதுகாவலர்களை படைமுகாம் ஒன்றிலே சந்தித்துக் கலந்துரையாடியபோது, பல கருத்துக்களை முன்வைத்துள்ளார். ஏழெட்டு வருடமாகத் தேடியும் கிடைக்காத காணாமற்போனவர்களை - ஓரிரண்டு நாள்களுக்குள் தேடிக்கண்டுபிடிக்க முடியாது. போதியகால அவகாசம் தேவை.

படையதிகாரி டுமிந்த என்பவர் - நாவற்குழியில் வைத்து இருபத்துநான்கு பேரை கைது செய்ததாகக் கூறுகிறார்கள். எனவே அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுங்கள்.

நீங்கள் ஜனாதிபதியைச் சந்திக்கச் செல்லும்போது, எனக்கும் அழைப்பு விடுத்தால் நானும்வருவேன் எனவும் பல கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார். இது புண்ணுக்குக் கொடுக்கும் ஒத்தணம் போன்றதே தவிர, புண் மாறுவதற்கான மருந்து போன்றதில்லை.

இதைவிட, வலிவடக்குப் பிரதேசம் தொடர்பான விடயமும் மிகவும் முக்கியமானது. உயர்பாதுகாப்பு வலயமென சமாதானப் பேச்சுவார்த்தைகளிலும் முக்கியம் கொடுத்துப் பேசப்படும் விடயத்தின் பெரும் பகுதியே வலிவடக்கினுள் தான் முடங்கிப்போய் கிடக்கிறது. மக்களின் இயல்பு வாழ்வு தோற்றுவிக்கப்படவேண்டுமாக இருந்தால், வலிவடக்குப் பிரதேச உயர் பாதுகாப்பு வலயம் நீக்கப்படவேண்டியது அவசியமானதாகும். ஆனால், படையதிகாரி ஒருவருடன் உரையாடுவதன்மூலம், இது சாத்தியப்படுமா?

ஏனெனில், சந்திரபாலாவே சொல்லிவிட்டார். உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக முடிவெடுக்கக்கூடிய அதிகாரம் தன்னிடமில்லையென. பின்னர், ஏன் சந்திப்புக்கள்? பலன்கள் இல்லாமல் காலத்தை வீணாக்குவதற்காகவா? அல்லது அரசியலை நகர்த்திச் செல்லவா? விடை காணமுடியாத வினாவல்ல இது!

இதைவிட, வேறுஒரு சுவாரசியமான சம்பவமும் கடந்தவாரம் இடம்பெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி - யாழ்ப்பாணத்திலுள்ள தனது கட்சி அலுவலகத்திற்கு வந்திருந்தார். யாரோ வெளிநாட்டு அமைச்சர் ஒருவர் வருவது போல, பாதுகாப்பு ஏற்பாடுகள் ஸ்ரான்லி வீதியிலே இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

கூட்டணி அலுவலகத்துக்குள்ளே செல்வது இலகுவான காரியமாக அன்று இருக்கவில்லை. படையினரின் பரிசோதனைகள் குறுக்கு விசாரணைகளுக்குப் பிற்பாடே



உட்புகக்கூடியதாக இருந்தது. எமது பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை சந்திப்பதற்கு இத்தனை காவல்களைக் கடந்து செல்லவேண்டியுள்ளதேயென பொதுமக்கள் சிலர் ஆதங்கப்பட்டுக்கொண்டதோடு, தமது விசனத்தையும் வெளிப்படுத்தியிருந்தார்கள்.

எதற்காக இவர்களுக்கு வாக்குப் போட்டோம். எனவும் சிலர் எண்ணிக்கொண்டார்கள். சங்கரியார் போகும்வரை இராணுவப் பாதுகாப்புக் குறையவேயில்லை.

இந்த இடத்திலே ஒரு விடயம் நினைவுக்கு வருகிறது. சங்கரியார் - யாழ்ப்பாணத்தில் நிற்பதைவிட, கனடா, லண்டன் என வெளிநாடுகளில் நிற்கும் காலமே அதிகமென எழுதியதற்காக ஒரு பிராந்தியப் பத்திரிகையை யாழ்ப்பாணத்தில் வைத்து சங்கரியார் மோசமாக விமர்சித்தமைதான் அந்தவிடயம். கடந்தவாரம் நடந்து முடிந்த சங்கரியாரின் இரகசியவருகை - மக்கள் பலருக்குத் தெரியாமலேபோனது. அந்தப் பத்திரிகை வெளயிட்ட கட்டுரைக்குப் சபாஸ் போடுவது போலிருந்தது.

ஏமாறுபவர்கள் இருக்கும்வரை ஏமாற்றுபவர்களும் இருக்கத்தான் செய்வார்கள். ஆனால், ஏமாறும் பொதுமக்கள், என்று விழிதத்துக்கொள்கிறார்களோ அன்று ஏமாற்றுபவர்களின் இருப்பு கேள்விக்குறியாகும், என்பது நிதர்சனமான உண்மை.! ❖

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. திருக்குறள்

## நமது நோக்கு

# ஜப்பானின் அழைப்பும் புலிகளின் மறுப்பும்....

நேற்று கொழும்பில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மீளாய்வுக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு, விடுதலைப் புலிகளுக்கு விடுக்கப்பட்டிருந்த அழைப்பினை, அவர்கள் நிராகரித்து அதில் கலந்துகொள்ள மறுத்துள்ளமை யானது நியாயமானதொன்றேயாகும்.

இந்த அழைப்பினை நேரில் வந்து வன்னியில் விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடலை மேற்கொண்டபோது, விடுத்தவர் அந்தப் பிரசித்தி பெற்ற ஜப்பானின் விசேட தூதுவரான யசுஷி அகாஷி யேயாவார்.

இதே யசுஷி அகாஷிதான் பலமாதங்களின் முன்னர் ரோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு நிதி உதவிகளை வழங்கும நாடுகளின் உச்சிமாநாட்டில் கலந்துகொள்ளுமாறு, விடுதலைப் புலிகளுக்கு வலியுறுத்தி அழுத்தம் கொடுக்க வன்னிக்கு வருகை தந்தபோதும் அது சாத்தியமில்லாது போயிற்று.

அவரது அந்த அழைப்பினை தாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாமைக்கு விடுதலைப் புலிகள் அப்போது முன்வைத்த காரணங்களின் நியாயத்தன்மையை நிராகரிக்க அகாஷியால் முடியாது போயிற்று.

விடுதலைப் புலிகளைச் சாட்சியாகப் பயன்படுத்தி இலங்கை அரசு பெருமளவு நிதியுதவிகளை சமாதானத்தின் பேரால் பெற்றுக்கொள்ள, சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் மேற்கொண்ட அந்த தந்திரோபாய மூலோபாயத்திற்கு துணை புரியும் நோக்கிலேயே அவர் அப்போது செயற்பட்டார் என்பது மறுக்கமுடியாத உண்மை.

சமாதானப் பேச்சுக்கள் தேக்கமடைந்த நிலையில், அதன் எதிர்கால முன்னெடுப்புக்கள் குறித்த சந்தேகம் நிலவிய சூழலில், அப்போதைய அகாஷியின் வருகை மிக முக்கியத்துவம் மிக்க ஒன்றாகக் கருதப்பட்டது.

புரிந்துணர்வு உடன்பாட்டின் அம்சங்கள் பலவும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் அரசினால் அமுல்செய்யப்படாத நிலையில், இடைக்கால நிர்வாகம் ஒன்றை உருவாக்க வேண்டிய அவசியம் குறித்தே, விடுதலைப் புலிகள் கோரிக்கைக்கு அரசு தீர்க்கமான முடிவெதையும் முன்வைக்க பின் வாங்கிக் கொண்டிருந்த சூழலில், தமிழ்மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு உத்தரவாதமளித்த பிரகாரம் அரசும், படையினரும் செயற்படத் தவறிய கட்டத்தில், இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப் படுத்தவும், அது எதிர்கொள்ளும் நிதி நெருக்கடிக்கு தீர்வுகாணவும் ஏற்பாடு செய்யப்பட்ட அந்த ரோக்கியோ உச்சிமாநாட்டிற்கு சமாதானத்தின் பேராலும், வடக்கு - கிழக்கு மக்களின் புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணம் ஆகியவற்றின் அடிப்படையிலும் விடுதலைப் புலிகளையும் அழைத்து சாட்சியாக்க முனைந்த திட்டத்தினை புலிகள் தரப்பு தெளிவாக உணர்ந்திருந்ததால், அவர்கள் அந்தப் பொறிக்குள் சிக்காது தப்பிக் கொண்டனர்.

அது அகாஷியின் ராஜதந்திர அணுகுமுறைக்கு கிடைத்த ஒரு தோல்வியாக இருந்தாலும்கூட, விடுதலைப் புலிகளுக்கும், ஜப்பானுக்கும் இடையிலான உறவுகளை மேலும் புரிந்துணர்வுடன்கூடிய ஒன்றாக மாற்ற உதவியதே தவிர முரண்பாடுகளை ஏற்படுத்தியதில்லை.

அப்போது நிலவிய அரசியல்சூழலை விடவும், அரசியல் நெருக்கடிகள் அதிகமாகி சமாதானத்திற்கான அச்சுறுத்தல் முன்பை விடவும் பன்முகப்பட்டவகையில் தற்போது அதிகரித்துள்ளதுடன், தன்னுடைய அதிரடி அரசியல் நடவடிக்கைகள் காரணமாக ஜனாதிபதி சமாதானத்தின் மூலவேரையே சிதைக்க கங்கணம் கட்டி செயற்பட்டுவரும் வேகமும் தீவிரமாகியுள்ள நிலையில், இப்போது மீண்டும் அகாஷி வன்னிக்கு வந்து விடுதலைப் புலிகளுடன் பேசியுள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றேயாகும்.


இந்தச் சந்திப்பின்போது, இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் ரோக்கியோ மாநாடு தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தில் கலந்துகொள்ள அழைப்பினை புலிகளுக்கு விடுத்திருந்த போதும், புலிகள் அதனை ஏற்கமறுத்து அதற்கான காரணத்தையும் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இந்தமறுப்பு ஜப்பானை அவமதிப்பதோ, அவர்களின் அழைப்பை வேண்டுமென்று புறக்கணிப்பதோ ஆகாது எனவும் வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கென இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் இணைந்தே இந்த மாநாட்டில் ஒதுக்கப்பட்ட நிதியுதவிகளை கையாளவேண்டுமெனவும், தற்போது தெற்கில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளும், குழப்பங்களும் - சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைகளாகி விட்டுள்ளநிலையில், ஒரு தீர்மானமெடுக்கும் அதிகார வலுக்கொண்ட அரசு கொழும்பில் இயங்காத நிலையில், தாங்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதில் சாத்தியமில்லை என விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தெரிவித்த விளக்கம் நியாயமானதே என்பதை அகாகூஷி புரிந்துகொண்டிருப்பார் என்பதில் ஐயமில்லை.

நாட்டின் சமாதானத்திற்கும், அபிவிருத்திக்கும் விரோதிகள் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழர்களோ, அவர்களுக்குத் தலைமைதாங்கும் விடுதலைப் புலிகளோ அல்ல. தென்பகுதியின் இனவாதிகளும் அவர்களின் அரசியல் போட்டாபோட்டித் தலைமைகளும் மட்டுமே என்பதை இன்றைய அரசியல் யதார்த்தம் ஜப்பானுக்கும், ஏனைய சர்வதேச சமூகத்திற்கும் உணர்த்தியிருக்கும்.

இதனால்தான் அகாஷி, இன்றைய கொழும்பு அரசியலில் காணப்படும் குழப்பநிலை மேலும் சிக்கலடையும் சாத்தியம் உள்ளது எனறு எதிர்வுகூறல் செய்திருப்பதுடன், இம்மாதிரியான அரசியல் இழுபறிகளை சர்வதேசம் தொடர்ந்தும் பொறுமையுடன் பார்த்து சகித்துக்கொண்டிருக்காது என்றும் கூறியிருக்கிறார் என்றே கொள்ளவேண்டும். எது என்னவானாலும் விடுதலைப் புலிகள் மிகுந்த தெளிவுடனும், நிதானத்துடனும் நியாயமான அணுகுமுறைகளையே, சமாதான முயற்சிகள் தொடர்பான அரசியல் செயற்பாடுகளில் கடைப்பிடித்து வருகிறார்கள் என்பதையே அன்றாட நிகழ்வுகள் அனைத்தும் உணர்த்தி நிற்கின்றன.

## நாடும் நடப்பும்




# கடற்போக்குவரத்தை சீர்செய்யாவிட்டால் 5 ஆம் திகதிக்கு முன்னர் மறியற்போராட்டம்

## நெடுந்தீவு தேசிய எழுச்சிப்பேரவை எச்சரிக்கை

நெடுந்தீவுக்கான கடற்போக்குவரத்து சீர்செய்யப்படாவிட்டால், அடுத்தமாதம் 5 ஆம் திகதிக்கு முன் வீதி அதிகார சபைக்கு முன்பாக மறியற்போராட்டம் நடத்தப்போவதாக, நெடுந்தீவு பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை தெரிவித்துள்ளது.

கடற்போக்குவரத்து தொடர்பாக, வீதி அபிவிருத்தி அதிகாரசபை - பிரதம பொறியியலாளருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக குமுதினிப்படகு பழுதடைந்தநிலையில், ஊர்காவற்துறை துறைமுகத்தில் திருத்த வேலைக்காகத் தரித்துநிற்கின்றது. திருத்தவேலைக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

தீவக மக்களின் இயல்பு வாழ்க்கையும், மக்களின் சகல தேவைகளும் இந்தக் கடற்போக்குவரத்திலேயே தங்கியுள்ளது. கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக சீரான கடற்போக்குவரத்து இன்மையால் - மழை,காற்று,வெயில், கடற்கொந்தளிப்பு போன்ற பல்வேறுபட்ட இயற்கை அனர்த்தங்களுக்கு மத்தியில் திறந்த பழமைவாய்ந்த படகுகளில் நாளாந்தம் முந்நூறுக்கும் அதிகமான பயணிகள் பலதுயரங்களுக்கு மத்தியில் கடல் வழிப்பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில், தீவக மக்களின் போக்குவரத்துக்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்தமாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் தீவக மக்களின் கடல் வழிப்போக்குவரத்து சேவை தொடர்ந்து நடைபெற, உடன் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், தீவக பொது அமைப்புக்களின் பிரதி நிதிகளும், பொது மக்களும் வீதி அபிவிருத்தி அதிகார சபை அலுவலகத்தின் முன் மறியற் போராட்டம் ஒன்றை நடத்துவோம் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கற்கைநெறியைப் பூர்த்திசெய்தோருக்கு

# நியமனங்கள் வழங்கப்படுவதற்கு தனித்தனியாக விண்ணப்பிக்கவேண்டும்

தேசிய கல்வியியற்கல்லூரிகளில் - கடந்த வருடம் தமது கற்கைநெறியைப் பூர்த்திசெய்து வெளியேறியோர் தமது நியமனம் தொடர்பாகத் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய கல்வியியற்கல்லூரிகளில் - கற்றுவெளியேறிய மாணவர்கள் நியமனம் தொடர்பான விண்ணப்பங்களைத் தத்தமது கல்வியியற்கல்லூரிகளிலேயே பெற்று, உடனடியாகப் பூர்த்திசெய்து ஒப்படைக்குமாறு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதன் தெரிவித்துள்ளார்.

கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கு, நியமனம் வழங்குவது தொடர்பாக இந்த ஆண்டிலிருந்து, புதிய நடைமுறை அறிமுகப்படுத்துவதனாலேயே, விண்ணப்பங்களை தனித்தனியாக அனுப்பவேண்டியுள்ளது.

நேரில் விண்ணப்பங்களைப் பெறமுடியாதோர் தமது முகவரியிட்ட கடித உறையுடன், உரிய கல்வியியற் கல்லூரிகளின் பீடாதிபதிகளுடன் தொடர்புகொள்ளும்படியும், இதன்போது - முழுப் பெயர், பதிவியிலக்கம், பயிற்சிநெறி ஆகியவற்றைத் தவறாது குறித்து அனுப்பும்படியும் கேட்கப்பட்டுள்ளனர்.

# பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிப் பட்டறை யாழ். செயலகத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப்பட்டறை ஒன்று - எதிர்வரும் 31 ஆம் திகதி யாழ் செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

கொழும்பு தொலைக்கல்வி நிலையத்தின் உயர் அதிகாரிகள் குழுவொன்று, எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளது. அந்தக் குழுவின் ஏற்பாட்டிலேயே இந்தப் பயிற்சிப்பட்டறை இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் - வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சிப்பகுதிகளில் கல்விகற்பிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப்பட்டறை இடம்பெறவுள்ளது.

இப்பயிற்சிப்பட்டறைக்கு அனைத்துப்பதவிநிலை உத்தியோகத்தர்களையும் கலந்துகொள்ளுமாறு, யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.ப.திலகநாயகம்போல் கேட்டுள்ளார். (ப)

# இந்த ஆண்டு இறுதிக்குள் யாழ்ப்பாணத்தில் பன்னிரண்டு விவசாய வங்கிகள் நிறுவப்படும்

## யாழ். மாவட்ட கமநலசேவை உதவி ஆணையாளர்

யாழ். மாவட்டத்தில் இந்த ஆண்டு முடிவிற்குள் 12 விவசாய வங்கிகள் அமைக்கப்படும் என, யாழ். மாவட்ட கமநலசேவைத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் தெரிவித்தார்.

விவசாய வங்கி திறப்பதில் ஏற்படும் தாமதம் குறித்துக் கேட்டபோதே இதனைத் தெரிவித்தார். அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது.

யாழ்.மாவட்டத்தில் விவசாய வங்கிகளைச் செயற்படுத்துவதற்காக, கமநலசேவைத் திணைக்களத்தால் ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இதற்காக யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 17 பெரும்பாக உத்தியோகத்தர் மற்றும், கமநல சேவை லிகிதர்கள் வவுனியா மற்றும் பொலநறுவைப் பகுதிகளுக்கு அனுப்பப்பட வுள்ளார்கள்.


இவ்வாறு பயிற்சிபெற்றுவரும் இவர்கள், எதிவரும் மார்ச் மாதம் முதல் புத்தூர், நல்லூர், உடுவில், புலோலி, சாவகச்சேரி, ஆகிய பகுதிகளில் இயங்கவுள்ள கமக்காரர் வங்கிகளில் பணியாற்றவுள்ளார்கள்

தொடர்ந்தும் பயிற்றுவிக்கப்படும் உத்தியோகஸ்தர்களால் இந்தக் கமக்காரர் வங்கிச்செயற்பாடுகள் விரிவுபடுத்தப்படும்.

கடந்த 9 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற கமநல சேவைத்திணைக்கள அதிகாரிகளுக்கான கலந்துரையாடலில் விவசாய அமைச்சு, யாழ். மாவட்டத்திலுள்ள 12 கமநல சேவை நிலையங்களிலும் 12 விவசாயவங்கிகளை நிறுவுமாறு பணிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

எரியும் பிரச்சினைகள் — ஆதி

# மக்களின் உயிர் வாழ்வை நிராகரிக்கும் உயர் பாதுகாப்பு வலயம்...





ஈழத்தமிழர்களின் வாழ்வியலுக்கான அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டதன் விளைவே - கடந்த நூற்றாண்டுகால ஆயுதப் போராட்டம். அதில் தமிழர் தரப்பினால் கொடுக்கப்பட்ட விலைமதிக்கமுடியாத தியாகங்களே இன்றைய புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கான தோற்றம். ஆகவே, வாழ்வியலுக்கான தமிழர் இருப்பிடங்களை இன்னும் ஆக்கிரமிப்பதும், அங்கிருந்த படையினர் வெளியேற காலம்தாழ்த்துவதும் குடாநாட்டில் பாதகமான அரசியல் சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கும்.

யாழ்.குடாநாட்டின் அதிகபயன் தரும் நிலப்பரப்புக்கள், கடல்வளங்கள், கைத்தொழில் மையங்கள், கனியவளப்பிரதேசங்கள் என்று வகைதொகையற்ற பிரதேசங்களை உயர் பாதுகாப்பு வலயம் என இராணுவம் தனது ஆளுகைக்குட்படுத்தியுள்ளது. பத்து வருடங்களுக்கும் மேலாக, இவ்வாறு மக்களின் வாழ்விடங்களை அபகரித்து, இராணுவம் உள்ளபோது, மக்கள் அகதிமுகாம்களிலும் இரவல் காணிகளிலும் அவல வாழ்க்கை வாழ்ந்துவருகின்றனர்.

யுத்தநிறுத்தமும் புரிந்துணர்வு ஒப்பந்தமும் நடைமுறைக்கு வந்து, இரண்டு வருடங்களாகியும் தமிழ் மக்களின் வாழ்விடங்கள் அவர்களுக்கு மீள வழங்கப்படவில்லை. ஆறு கட்டப் பேச்சுக்களிலும் மீள் குடியமர்வு, புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் என்பன பற்றியே பேசப்பட்டன. ஆனால், அதில் எந்தவிடயமும் நடைமுறைக்கு வரவில்லை. யாழ். குடாநாட்டிற்கு வரும் சகல வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடமும் முன்வைக்கப்படும் பிரச்சினை, மீள்குடியமர்வு என்பதுதான். அதனைவிட அரசாங்க அமைச்சர்கள் பலரும் மீள்குடியேற்றத்திற்கான வாக்குறுதிகளை வழங்கியுள்ளனர். வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு தனது கையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் வடக்கைத் துரிதகதியில் கட்டியெழுப்பப் போவதாகக் கூறிய அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனா இரண்டு வருடங்களாகப் புனரமைப்புக்கான திட்டங்கள் மட்டுமே தீட்டியுள்ளதாகக் கூறுகின்றனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாக்குறுதிகளை அள்ளி வீசினார்கள். வீரவசனங்கள் பேசினார்கள். கடைசியில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளும் உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ளது. தனது வீட்டுக்குப்போகவும், தனது வீட்டில் குடியிருக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினருக்கு இயலவில்லை என்பதால், உயர் நீதிமன்றம்வரையும் போயும் பயன்கண்டபாடாக இல்லை.

யாழ்.மக்களின் வாழ்விடங்களை அபகரித்துள்ளமை - இலங்கை அரசுக்கு ஒரு நல்ல சகுனமாக எதிர்காலத்தில் இருக்கப்போவதில்லை. தமிழ்மக்கள் பட்டறிவினூடாக, இலங்கை அரசையும் சிங்கள ஏகாதிபத்தியவாதிகளின் சூழ்ச்சிகளையும் உணர்ந்துகொண்டவர்கள். அவர்களின் நடத்தைகளைக் கொண்டு, எதிர்காலத்தை முன்னுணர்ந்து, தம்மைத் தயார்ப்படுத்தத் தெரிந்துகொண்டவர்கள். ஆகவே, தமிழ்மக்களை இனியும் ஏமாற்ற முற்படுபவர்கள் யாராக இருந்தாலும், காலகதியில் தோற்கடிக்கப்படுவார்கள்.

**யாழ்.மாவட்ட உயர் பாதுகாப்பு வலயங்களும், அதனுள் அடக்கப்பட்டுள்ள தமிழ்மக்களின் உடைமைகளும்**

| உ.பா.வலயம் | பாதிக்கப்பட்டுள்ள வீடுகள் | பாதிக்கப்பட்ட பாடசாலைகள்/ஆலயம் | பாதிக்கப்பட்ட குடும்பங்கள் |
|---|---|---|---|
| 1. நீலக்காடு | 150 | 4 | 150 |
| 2. ஊருண்டி | 152 | 1 | 202 |
| 3. மண்டைதீவு | 498 | 2 | 557 |
| 4. ஞானம்ஸ்வீடுதி | 110 | - | 125 |
| 5. கிழக்கரியாலை | 1970 | 14 | 2450 |
| 6. தனங்கிளப்பு | 715 | 2 | 709 |
| 7. எழுதுமட்டுவாள் | 687 | 11 | 687 |
| 8. அம்பன் | 536 | 18 | 551 |
| 9. பல்லம்பை | 10 | 1 | 10 |
| 10. பருத்தித்துறை | 38 | 7 | 57 |
| 11. வல்வெட்டித்துறை | 15 | 2 | 20 |
| 12. தெல்லிப்பளை | 24594 | 180 | 24816 |
| 13. அராலி (தீவு) | - | - | - |
| 14. வேலணை | 50 | - | 61 |
| மொத்தம் | 29525 | 242 | 30395 |

யாழ். குடாநாட்டுக்கான புதிய இராணுவத் தளபதியின் நியமனமும், அவரது நடவடிக்கைகளும் தமிழ்மக்களைக் கடந்தகாலக் கசப்புணர்வுகளை மறக்க வைப்பதற்கான அடிப்படைத் தந்திரோபாயமாகவுள்ளது. ஆனால், மறக்கமுடிந்த மனவடுக்களைத் தமிழ்மக்கள் கொண்டிருக்கவில்லை. எமது வீடுகளை மூடி, எமது பாடசாலைகளை இடித்து, எமது ஆலயங்களுக்குக் குண்டு போட்டுத் தகர்த்து, எமது சகோதரர்களைப் புதைகுழிக்குள் தேடவைத்து, எமது உறவுகளை காணாமற்போனோர் என்ற பட்டியலுக்குள் அடுக்கி, தமிழ் மக்களின் வாழ்வைச் சிதைவடையச் செய்வதற்குத் திட்டமிட்டு மேற்கொண்ட அராஜகங்களை மறந்து போவதென்பது முடியுமான காரியமல்ல.

மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால - ஒரு சில வீதிகளை மக்கள் பாவனைக்குத் திறந்துவிட்டார். சில பிரதேச மக்களுக்கு அரிசிப் பொட்டலங்களும் வழங்கியுள்ளார். பொது மக்களின் வாழ்வியல் பிரச்சினை தொடர்பாகத்தான் கவனம் செலுத்துவதாக கூறிவருகின்றார்.

யாழ்.மக்களின் ஒரே பிரச்சினை- தங்கள் மண்ணில், தங்களின் வீட்டில் தாங்கள் வாழ்வதற்கான வாழ்வியல் உரிமைதான். அந்த மனிதாபிமான அடிப்படைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உருப்படியாக எதையாவது செய்யவேண்டும் என்பதே தமிழர் தரப்புக் கோரிக்கையாகும். மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட ஒரு சில இடங்களில் - இரவுவேளையில் இராணுவம் வீடுகளுக்குச் செல்வதும், வீட்டில் உள்ளோர் பற்றிக் கணக்கெடுப்பதும், வேலிகள், மறைவுகள் ஏற்படுத்தக்கூடாது, புதிய கட்டடங்கள் அமைக்கக்கூடாது, உயர்ந்து வளரும் பயிர்கள், மரங்கள் நாட்டக்கூடாது. இராணுவத்தினரின் பார்வைக்குத் தெரியக்கூடிய வகையில் காணிகள் இருக்கவேண்டும் என்று கூறி வருகின்றனர். சில இடங்களில் மீளக்குடியமர்ந்தோர், இராணுவ நெருக்கடிகளால் மீண்டும் இடம் பெயர்ந்த கதைகளும் யாழ். குடாவில் தொடர்கிறது.


இலங்கையின் சுதந்திர தினத்திற்கு முன்பாக, உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து வெளியேற்றப்பட்டவர்களை மீளக்குடியமர அனுமதிக்கவேண்டும். அவ்வாறு அனுமதிக்கப்படாவிட்டால், அடுத்த தைப் பொங்கலோடு மீண்டும் ஒருமுறை தமிழும் பொங்குவதற்கான வாய்ப்புகள் உண்டு. யாழ். குடாநாட்டு மக்கள் இலங்கை அரசிடம் கேட்டுநிற்பது சலுகைகள் அல்ல. உரிமைகளே என்பதை இன்னும் அரசோ, அரசபடைகளோ, சர்வதேசமோ விளங்கிக்கொள்ளவில்லை. இந்த நிலைமை நல்லுறவையும், நட்பையும் கட்டியெழுப்புவதற்குப் பொருத்தமானதல்ல. முதலில் மக்களின் வாழ்வியல் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, அவர்களில் சொந்த இடங்களில் வாழ அனுமதிக்கப்பட்டதன் பின்னரே, மற்றைய விடயங்களை அவர்கள் உணரவோ, பகிரவோ முடியும்.

இப்போது "600 மீற்றர் பாதுகாப்பு வலயம்சார் பிரதேசத்தில் மீளக்குடியமர்வு" என்றொரு செய்தி இந்த அப்பாவி மக்களை அங்கலாய்க்க வைத்துள்ளது. உயர் பாதுகாப்பு வலய எல்லை என்பது தன்னிச்சையான அடாவடித்தனங்களில் ஒன்று. எனவே தற்போது வெளிவந்துள்ள அறிவித்தல் - இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த அப்பாவி மக்கள் அனைவரையும் முடுக்கிவிட்டுள்ளது. கிராம அலுவலர்கள் மீள் குடியமர்வுப் பத்திரங்களை விநியோகிக்கிறார்கள் என்று ஒரு செய்தி. 7000 குடும்பங்களை மீளக்குடியமர்த்த இருப்பதாக மற்றொரு செய்தி. ரூபா 52,000 நிவாரணம் வழங்கப்படவிருப்பதாக ஒரு வதந்தி. தற்போது பாதுகாப்பு வலய வேலியிலிருந்து 600 மீற்றர் எல்லையில் நாட்டப்பட்ட முக்கோணத் தகர விளையாட்டுப் பகுதிக்குள் குடியமர்த்த அனுமதித்ததாக பிறிதொரு செய்தி. இவை எதுவுமேயில்லையென்றும், உயர்பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் குடியேறக்கூடிய எத்தனை பேர் யாழ்.மாவட்டத்திலுள்ளனர் என்ற தகவல் சேகரிப்பு நடவடிக்கையே மேற்கொள்ளப்படுகின்றது என்றொரு செய்தியும் உண்டு.

உண்மை எது? வதந்தி எது? என்பது புரியாதநிலையில் மக்கள் அங்கலாய்க்கின்றார்கள். "பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகுது" என்பது போல அமையும் யாழ்.குடாநாட்டு தமிழர்களின் அவலநிலை தொடர்கிறது.

---

விமர்சன நோக்கு — தே.தேவானந்த்



# கிராமங்களின் புத்துயிர்ப்புக்கு வழிவகுத்த வேரடிமண்



அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் சாவகச்சேரி, உடுவில், சண்டிலிப்பாய், பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள பதினொரு சிற்றூர்களில் இந்த விழா நடைபெற ஒழுங்குகள் மேற்கொண்டிருந்தது. ஜனவரி 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த விழா - தாவடி தெற்கு, கரம்பைக்குறிச்சி, வரணி, ஏழாலை தெற்கு, கைதடி, நாவற்குழி, கோகிலாக்கண்டி, தச்சன்தோப்பு, நாவற்குழி சந்தி போன்ற இடங்களில் வெகுசிறப்பாக நடந்துமுடிந்தது.

பாரம்பரிய சிறுபராயம் முதல் விளையாடப்பட்ட பல விளையாட்டுக்கள் ஊர்களில் விளையாடப்படுகின்றபோது, ஊரிலுள்ள அனைவரும் மிகவிருப்புடன் ஈடுபடுவதைக் காணமுடிகிறது. ஐம்பதுக்கு மேற்பட்ட கிராமிய விளையாட்டுக்கள் விளையாடப்படுகின்றன. வயது முதிர்ந்த மூதாட்டிகள், இளம் பெண்கள், சிறுவர்கள் எனப் பலரும் ஆர்வமுடன் பங்குபற்றியிருந்தார்கள். பாரம்பரிய விளையாட்டுக்கான இடஒழுங்கமைப்புகூட, பாரம்பரிய முறைப்படி நடைபெறுவதனை அவதானிக்கலாம். நெல் அடிக்கும் படகுகள் கட்டப்பட்ட கொட்டகைகளில் தரையில் அமர்ந்து மக்கள் பார்க்கக்கூடியதாக ஊரின் மத்தியிலுள்ள இடம் மிக அழகாக அலங்கரிக்கப்படுவது சிறப்பானது. மாவிலைத் தோரணம், இலைகள் என்று இயற்கையோடு பிணைந்து அலங்காரங்களை இந்த விழாக்களில் காணமுடிகிறது. ஒவ்வொரு கிராமங்களிலும் முப்பதுக்கு மேற்பட்ட இளம்பெண்கள் இதற்கான ஆயத்தப்பணிகளில் பலநாட்கள் ஈடுபடுவதைக் காணமுடிகிறது. அம்மாமார் விளையாடுவதைப் பார்த்த பிள்ளைகள் - தாமும் ஓர் இடத்தில் கூடிவிளையாடுகிறார்கள். விழா முடிந்த பின்பும் பல இடங்களில் தொடர்ந்தும் பாரம்பரிய விளையாட்டுக்கள் விளையாடப்படுகின்றன. ஊர்களிலுள்ள சிறிய வெளியெங்கும் கிளிக்கோடு வரையப்பட்டு வருகின்றது. பிள்ளைகள் 'சங்கிலி புங்கிலி கதவைத்திற' என்று கத்துவதும், 'குலை குலையா முந்திரிக்காய் நரியே நரியே சுற்றிவா' என்று பாடுவதும் இன்று ஊர்களில் நடக்கின்றது.

விளையாட்டுக்கள் நடந்துகொண்டிருக்கும்போது - கூடியிருப்போரில் வயது முதிர்ந்தவர்கள் - தம் பழைய நினைவுகளை மீட்டு மகிழ்கின்றனர். தாம் விளையாடிய ஆனால், இன்றுவரை காவிவரப்படாத விளையாட்டுக்கள் இருப்பதை இனங்காட்டியுள்ளார்கள். ஒவ்வொரு ஊரிலும் தனித்துவத்துடன் கூடிய ஒவ்வொரு விளையாட்டுக்கள் இருப்பதை இனங்காணமுடிந்தது. ஒரே விளையாட்டு வெவ்வேறு ஊர்களில் வெவ்வேறு வகையாக விளையாடப்படுகின்றது. உதாரணமாக - கிட்டிப்புள் விளையாட்டு ஆறு முறைமைகளில் விளையாடப்படுவதை அவதானிக்கமுடிகிறது.

பல பாடசாலை ஆசிரியர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பெரியவர்கள், அதிபர்கள் என்று பலரும் மீண்டும் ஊர்கள் கூடுவதைக் கண்டு அதிசயித்தார்கள், பூரித்தார்கள். தாங்கள் உற்சாகமாக உள்ளதாக உணர்ந்தார்கள். அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் முயற்சி பலனளிப்பதாக அமைந்திருப்பது சிறப்பானது. 'வேர்களைத் தேடும்' அனைவரும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவேண்டும். இனிவரும் நாட்களில் மேற்கு ஊரியான், பிரானபற்று, நாவற்குழி கிழக்கு போன்ற இடங்களில் இந்த நிகழ்வு நடைபெறும்.

## திருச்சி - திருவரங்கத்தில் பயங்கரம்:

# திருமண மண்டப தீ விபத்தில் மணமகன் உட்பட 55 பேர் பலி!

## மணமகள் உட்பட 100 பேர் படுகாயம்





தமிழ்நாடு திருச்சி திருவரங்கம் திருமண மண்டபத்தில் ஏற்பட்ட பயங்கரத் தீ விபத்தால் மணமகன் உட்பட 55 பேர் கருகி பரிதாபகரமாக உயிரிழந்த அதேவேளை, மணமகள் உட்பட 100 பேர் வரை தீக்காயத்தால் உயிருக்காக போராடிக் கொண்டிருக்கிறனர்.

இந்தத் துயரச் சம்பவம் நேற்று இடம் பெற்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

திருச்சி திருவரங்கத்தைச் சேர்ந்த குரு (வயது 38), அதே இடத்தைச் சேர்ந்த சிறீ பிரியா (வயது 35) இருவருக்கும் நேற்று திருமணம் நடப்பதாக இருந்தது.

இதன்படி இ.பி.எஸ். வீதியிலுள்ள திருமண மண்டப மொட்டை மாடியில் குருக்கள் யாகம் வளர்த்துக் கொண்டிருந்தவேளை திடீரென மொட்டை மாடியில் உள்ளே போடப்பட்டிருந்த கிடுகுஓலைப் பந்தலில் தீ பிடித்துக் கொண்டது.

இதனை அவதானித்த மொட்டை மாடியில் இருந்தவர்கள் பந்தலில் தீ என சத்தம் போடத் தொடங்கினர். மொட்டை மாடியில் எந்தப் பகுதியில் தீ பரவியது எனத் தெரியாத நிலையில் திருமண நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் அங்குமிங்கும் சிதறி ஓடத் தொடங்கினர். அதற்குள் தீ பந்தல் முழுவதும் பரவிக் கொண்டது.

இதனால் மாடியில் இருந்தவர்களால் வெளியே வரமுடியவில்லை. மாடியில் நின்றவர்கள் மீது நெருப்புப் பிடித்த பந்தல் விழுந்தது. இதனால் அங்குநின்றவர்களில் பெரும்பாலானோர் கருகி இறந்தனர்.

தகவலறிந்து பொலிஸாரும், தீயணைப்புப் படையினரும் சம்பவ இடத்திற்கு வந்து தீயை பெரும்பாடுபட்டு அணைத்த பின்னர் இறந்த, காயமடைந்தவர்களை அப்புறப்படுத்தினர்.

இதன்போது மணமகனும் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். மணமகள் தீக்காயத்தினால் உயிருக்காகப் போராடிய நிலையில் மருத்துவ மனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

இதுவரை மணமகன் உட்பட 55 பேர் இறந்துள்ளதாகவும் மணமகள் உட்பட 100 பேர் வரை உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படும் அதேவேளை, இறந்த மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, திருமண நிகழ்வை படம் பிடித்துக் கொண்டிருந்த வீடியோ கமராவிலிருந்து ஒளி அதிகமாக வெளிச்சத்தை வெளியிட்டதால் அந்த வெளிச்சம் தீயின் மீது பட்டு பிரகாசித்ததனாலே இந்தத் தீவிபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஸ்பிரிட் விண்கலத்துடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாக நாஸா தெரிவிப்பு

(வொஷிங்ரன்)

கடந்த 24 மணித்தியாலங்களாக அமெரிக்க நாசா விண்வெளித் தளத்தில் இருந்து செவ்வாய்க்கிரகத்திற்கு அனுப்பப்பட்டிருந்த ஸ்பிரிட் கலத்திலிருந்து தகவல்கள் எவற்றையும் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாக நாசா விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இந்தக்கலம தரையிலிருந்து பல உபயோகமான வர்ணப்படங்களை அனுப்பி வைத்துள்ளது.

பூமியில் இருந்து ஸ்பிரிட் கலம் தகவலகளைப் பெற்றுக் கொள்கின்றது என்ப தற்கான தகவல்களை, சமிக்ஞைகளை விஞ்ஞானிகளால் பெற்றுக்கொள்ள முடிவதாகத் தெரிவிக்கப்பட்டது. இதன்மூலம வானொலித் தொடர்புகள் சரியாகச் செயற்பட்ட போதும், ஸ்பிரிட் கலத்தின் கணணிகள் நன்கு செயற்படவில்லை எனத் இந்தத் திட்டத்தின் உதவித்தலைவர் தெரிவித்தார்.

ஸ்பிரிட் கலத்தைப் போன்று தயாரிக்கப்பட்ட சிறிய கலமொன்று நாசா பரிசோதனைக் கூடத்தில் உள்ளதாகவும், அதன் மூலம் செவ்வாயில் தரையிறங்கிய கலத்தில் ஏற்பட்டுள்ள தவறுகளை திருத்திக்கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நாசா விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

ஸ்பிரிட் கலத்தில் தகவல் தொடர்புகள் துண்டிக்கப்படுவதற்கு முன்பு ஸ்பிரிட் கலம் உதைபந்தாட்டத்தில் பாவிக்கப்படும் பந்தின் அளவிலான பாறையொன்றின் முன் நிறுத்தப்பட்டு, அதன் உபகரணங்கள் பொருத்தப்பட்ட



இயந்திரக் கை பாறையை அரைத்து பின்னர் பகுப்பாய்வில் ஈடுபடுவதற்கு முன்னர் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்தது.

மேலும் ஸ்பிரிட் கலத்திற்கான தகவல்கள் அவுஸ்திரேலியாவின் கன்பராவில் அமைந்துள்ள வானொலி தொலைநோக்கி கருவியின் ஊடாக வழங்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

## உலக நோக்கு

### கோழிகளின் ஏற்றுமதி தாய்லாந்து அரசு தடை

(தாய்பேய்)

தாய்லாந்தில் கோழிகளுக்கு ஒருவகை நோய் ஏற்பட்டுள்ளதால், இறைச்சிக் கோழிகளின் ஏற்றுமதியை அந்நாட்டு அரசாங்கம் தடைசெய்துள்ளது. கோழிப்பண்ணை ஒன்றில் இந்த நோயினால் பாதிக்கப்பட்டு இறந்த கோழிகளை தொடநேர்ந்ததால், இரு சிறுவர்களும் அந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக பொது சுகாதார அமைச்சர் சுட்டராட் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

ஆசிய நாடுகளிலே கோழிகளுக்கு சுர நோய் ஏற்படுவது பொதுவாகக் காணப்பட்டாலும், இந்நோய் மனிதர்களைப் பாதிப்பது அரிதாகவே நடைபெறுகின்றது என்றும் பாதிக்கப்பட்ட இரு சிறுவர்களும் கோழிப்பண்ணைக்கு அருகில் வசித்து வந்ததாகவும் சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

கோழி இறைச்சி ஏற்றுமதி தடைசெய்யப்பட்டுள்ளதால் பல பில்லியன் டொலர்களை தாய்லாந்து இழக்க நேரிடும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## பஞ்சாப் முதல்வர் பீன்சிங் படுகொலை

# சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட மூவர் சிறையிலிருந்து தப்பியோட்டம்!

பஞ்சாப் மாநில முதல்வர் பீனர்சிங் 1995 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூவர், மிகுந்த பாதுகாப்பான சிறையிலிருந்து தப்பியோடியுள்ளதாகவும், இவர்களைக் கைதுசெய்ய பாரியளவிலான தேடுதல் ஒன்றை பொலிஸார் நடத்திவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. தப்பியோடியவர்களில் முதல்வர் கொலையின் முக்கிய நபரான ஜக்ரார் கிங்கவராவும் அடங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பஞ்சாப் தீவிரவாதிகளுக்கு எதிராக கடும போக்கினை முதலமைச்சர் பீன்சிங் மேற்கொண்டு வந்தமையே இவரின் கொலைக்கு காரணமாக அமைந்ததாகவும் தெரிவிக்கபபட்டது.

தப்பியோடியுள்ள முக்கிய கொலைச் சூத்திரதாரியான கவாரா, 1998 ஆம் ஆண்டு சிறைச்சாலையில் வெடிகுண்டுத் தாக்குதலை மேற்கொண்டு தப்பியோடுவதற்கு முயற்சி செய்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் சிறையில் இருந்து வேளியேறுவதற்கு 108 அடி நீளமான சுரங்கப்பாதை, சிறைச்சாலையிலிருந்து அதன் பாதுகாப்புச் சுவரின் வெளிப்பக்கம் வரை அமைக்கப்பட்டிருந்தது. சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஏனைய கைதிகளின் உதவியுடன் 6 மாதம் வரை இந்தச் சுரங்கப்பாதை தோண்டும் வேலை நடைபெற்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஊர்சுற்றி எழுதுவது

பேச்சுக்கள் பற்றிப் பேசப்படுகிறது. முடிவில்லாத பேச்சுக்கள்.

பின்னர் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுகின்றன, உடன்படிக்கைகள் செய்யப்படுகின்றன.

ஆனால், இந்த ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் பற்றிப் பின்னர் சில மேடைகளில் பேசப்படுவதுடன், அறிக்கைகளும் வெளியிடப்படும். பின்னர், இந்த ஒப்பந்தங்கள் பற்றிப்பேசுவதைக் கூட மறந்துவிடுவார்கள்.

இலங்கையில் தமிழ்மக்கள் சம்மந்தமாக அவர்களுக்கு உரிமை பெறுவது பற்றி எந்தச் சமயத்தில், எந்தச் சந்தர்ப்பத்திலும் செய்துகொள்ளப்படும் ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் உருப்படுவதில்லை.

தமிழர் சம்மந்தமாகச் செய்யப்படும் ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் கபடத்தனமாகச் செய்யப்படுவதால்தான் இவை செயறபடாமல் போய்விடுகின்றனவோ!

1965 ஆம் ஆண்டளவில் முன்னாள் தீவுத்தொகுதி எம்.பி.யும், சுயாட்சிக் கழகத் தலைவருமான வி.நவரத்தினம் "ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும" என்ற தலைப்பில் ஒரு சிறுபிரசுரம் ஒன்றை வெளியிட்டார். இந்த ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் தமிழ்த் தலைமுறைகள் ஏமாந்த வரலாற்றை அவர் இந்தப் பிரசுரத்தில் வெளியிட்டிருந்தார்.

சேர் .வைத்திலிங்கம் துரைசுவாமியின் இல்லமான 'மகேந்திரவாசா'வில் (யாழ். மணிக்கூட்டு கோபுரத்திற்கருகே இருந்த வீடு) சிங்களத்தலைவர்களுடன் தொகுதி ஒதுக்கீடு சம்மந்தமாக கைச்சாத்திடப்பட்ட 'மகேந்திர ஒப்பந்தம்' முதல், டட்லி - செல்வா ஒப்பந்தம் வரை நடந்த மோசடிகள் பற்றி திரு.நவரத்தினம் அதில் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையில் 1950 ஆம் ஆண்டுத் தொடக்க காலத்தில் செய்து கொள்ளப்பட்ட ரப்பர் - அரிசி ஒப்பந்தம் தான் இன்று வரை வெற்றிகரமாக் நிறைவேற்றப்பட்டுவரும் வர்த்தக ஒப்பந்தமாகும்.

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் பலதடவைகள் வர்த்தக ஒப்பந்தங்கள் கைச்சாத்திட்டப்பட்டிருக்கின்றன. இவை கைச்சாத் திடப்படும் சமயத்தில் ஆகா அருமையான ஒப்பந்தமென்றாலும் இதனால், இலங்கைக்கு அதிக நன்மை கிடைக்குமென்று பத்திரிகைகளும், அரசியல்வாதிகளும் பாராட்டி புளுகித்தள்ளுவார்கள். பின்னர் இந்த ஒப்பந்தத்தினால், இந்தியாவே அதிக நன்மை பெற்றதென்று வர்த்தக வட்டாரங்களைச் சுட்டிக்காட்டி அதேபத்திரிகைகள் கருத்து வெளியிடும்.

தமிழ்மக்களின் உரிமைகள் சம்மந்தமாக முதன்முதலில் செய்துகொள்ளப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம், இனத்துவேசத்தைக் கிளப்பி அதைத்தயாரித்து கைச்சாத்திட்ட பிரதமர் பண்டாரநாயக்கவாலே அந்த ஒப்பந்தம் கிழித்தெறியச் செய்யப்பட்டது.

இதே தமிழர் பிரச்சினையில் தமிழ் மக்களுக்கு சிறிது சலுகை கிடைப்பதற்காக இரகசியமாகச் செய்து கொள்ளப்பட்ட, டட்லி - செல்வா ஒப்பந்தம் இடது சாரித் தலைவர்கள் கிளப்பிய வகுப்பு வாதத்தின் விளைவாக கிழித்தெறியப்பட்டது.

இப்பொழுது தமிழ்மக்களின் பிரச்சினைக்காக, இலங்கையின் பாதுகாப்புக்காக வல்லரசுகளுடனும், பிராந்திய வல்லரசுகளுடனும் பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றிப் பேசப்படுவதும், ஒப்பந்தம் கைச்சாத்திட நாள் பார்ப்பதும், வேடிக்கையாக இருக்கிறது.

இதே தமிழர் பிரச்சினையில் நாட்டைப் பாதுகாப்பதற்காக ஜே.வி.பியும், சந்திரிகா அம்மையாரின் சுதந்திரக்கட்சியும் பேசிப் பேசி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருப்பதும் வினோதம் தான்!

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தமிழ்மக்களின் பிரச்சினை குறித்து புலிகளுடனேயே பேச வேண்டும்!

## ஜனாதிபதிக்கு ஆனந்தசங்கரி கடிதம்

தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் மட்டும்தான் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும். சமகாலத்தில் வேறு எவருடனும் பேசக்கூடாது என்பது எனது நிலைப்பாடாகும்.

- இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.அனந்தசங்கரி ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார். அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

விடுதலைப் புலிகளின் பங்களிப்பு இன்றி இந்த நாட்டில் எப்பொழுதும் அமைதி ஏற்படாது. அவர்களுக்கு ஏற்புடையதாக உருவாக்கும் திட்டம, எமக்கு ஏற்புடையதாகவே இருக்கும்.

சமாதானப் பேச்சுவார்த்தை ஏற்பாடடாளரான நோர்வே, எமது நாட்டின் பல்வேறு திட்டங்களுக்கு வெவ்வேறு வழிகளில் உதவிவந்த மிக நட்புறவு கொண்ட ஒரு நாடாகும்.

அத்துடன் தங்களது அழைப்பின் பேரிலேயே அவர்கள் இங்கு வந்து சமாதான முயற்சியின் ஏற்பாட்டாளராகச் செயற்பட்டனர். பல இடையூறுகள் மத்தியிலும் செயற்பட்ட போதும் அவர்களின் பணியில் பெருமளவு அவமானங்கள் சங்கடங்கள் ஏற்பட்டன. அவர்களுடைய பணியை நாம் எந்த சந்தர்ப்பத்திலும் இழந்து விடாது தொடர்ந்து பெறவேண்டும். அந்த கௌரவமான பணியைத் தொடருமாறு அவர்களுக்கு அழைப்பு விடுக்கவேண்டும்.

இன்றைய உலகம் உங்கள் இருவரையும் உயர்ந்த தலைவர்களாக மதிக்கின்றது. எனவே இணைந்த உங்கள் இருவரது ஆட்சிக் காலமும் எமது நாட்டு சரித்திரத்தில் ஒரு நிரந்தர தீர்வை இணைந்து ஏற்படுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# சமாதானத்துக்கெதிரான கூட்டணி: பிரசாரத்தை சந்திரிகா நிராகரிப்பு!

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளுக்கு எதிராகவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் - ஜே.வி.பியினரும் கூட்டணியை உருவாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படும் கருத்துக்களை ஜனாதிபதி சந்திரிகா மறுத்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டின் இனப்பிரச்சனை தொடர்பாக இரு கட்சிகளும் புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொண்டுள்ளன. இனப்பிரச்சினைக்கு யுத்தம் தீர்வல்ல என்பதிலும் இரு தரப்பும் நம்பிக்கை கொண்டுள்ளன.

இருந்தபோதிலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துச் செல்லும் சமாதான நடவடிக்கை முறையினை இந்த இரு கட்சிக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளமாட்டாது.

தென்பகுதியில் சகல அதிகாரங்களுடன் இருக்கும் எந்தவொரு அரசாங்கத்துடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் தெரிவித்திருப்பதை ஜனாதிபதி சந்திரிகா வரவேற்கிறார்.

கடந்த இரண்டு தசாப்தங்களாக நாட்டில் நிலவுகின்ற இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அனைத்து அரசியல் அதிகாரங்களும் ஒன்றிணைய வேண்டுமென, ஜனாதிபதி மீண்டும் வலியுறுத்துவதாக, ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## புலமைப்பரிசில் முடிவு இன்று வெளியாகும்!

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பெறுபேறுகள் இன்று வெளியிடப்படும் என்று பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார்.

எதிர்வரும் திங்கட்கிழமை அளவில் அனைத்துப் பாடசாலைகளுக்கும் இந்த முடிவுகள் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார். கடந்த ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 3 லட்சத்து 11 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர். (01)

## நேட்டோ பேச்சாளராக ஜேம்ஸ் அப்பாத்துரை!

கனடாவில் வசிக்கும் தமிழரான ஜேம்ஸ் அப்பாத்துரை நேட்டோ நாடுகள் அமைப்பின் பேச்சாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பெல்ஜியத்தைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் நேட்டோ (NATO) நாடுகள் அமைப்பின் தலைவராகத் தற்போதுள்ள நெதர்லாந்தின் முன்னாள் வெளிநாட்டு அமைச்சர் ஜாப் டி ஹூப் ஸாபர் நேற்று இந்த அறிவிப்பை உத்தியோகபூர்வமாக வெளியிட்டார்.

35 வயதுடைய ஜேம்ஸ் அப்பாத்துரை, இதற்கு முன்னர் நேட்டோ அமைப்பின் அரசியல் மற்றும் பாதுகாப்பு செயலகத்தில் 1998 ஆம் ஆண்டிலிருந்து பணியாற்றியுள்ளதுடன், கனடாவின் திட்டமிடல் மற்றும் உரைதயாரிப்பு பிரிவின் பிரதித் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவை தவிர, இவர் ரொறன்ரோவில் இயங்கும் சி.பி.சி.ஊடகத்தில் பணிபுரிந்ததுடன், கனடிய பாதுகாப்பு அமைச்சின் கொள்கை ஆலோசகராக ஒட்டாவா கிளையில் பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர் தெரிவுக்கான விண்ணப்ப திகதி நீடிப்பு

க.பொ.த. உயர்தர சித்தியுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து ஆயிரம் பேரை ஆசிரியர்களாகத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இந்தமாதம் 31 ஆம் திகதிவரை நீடிக்கப் பட்டுள்ளது.

இதற்கான வர்த்தமானி அறிவித்தல் அரசினால் நேற்று வெளியிடப்பட்டது. அத்துடன் வயதெல்லையும் 18 இலிருந்து 35 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் போட்டிப் பரீட்சை கொழும்பு உட்பட, நாட்டின் சகல மாவட்டங்களிலும் நடைபெறும். (10)

## அமைச்சர் மிலிந்த புதுடெல்கி பயணம்

இந்திய - இலங்கை பாதுகாப்பு உடன்படிக்கை குறித்து ஆலோசனைகளை நடத்துவதற்காக அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்றிரவு புதுடெல்கிக்குப் பயணமானார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோருடன் பேச்சுக்களை நடத்துவதற்காகவே மிலிந்த மொறகொட புதுடெல்கிக்கு விஜயம் செய்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளை வலுப்படுததும் நோக்குடன் செய்து கொளளப்படவுள்ள இந்த உடன்பாடு குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தை இந்திய அதிகாரிகளுக்கு அமைச்சர் மிலிந்த மொறகொட தெரியப்படுத்துவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### தமிழ்ச்செல்வனுடன்...

நடைபெற்றது.

சமாதான நகர்வுகள் குறித்த விடயங்கள் இந்த சந்திப்பில் ஆராயப்பட்டதாக ஊடகவியலாளர்களிடம் அமைச்சர் பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

### இரண்டு பதவிக்...

1994 ஆம் ஆண்டின் பின்னர் ஜனாதிபதி சந்திரிகா இரண்டு பதவிக் காலங்களுக்காக மூன்றுமுறை பதவிப்பிரமாணம் செய்துள்ளார்.

எனவே, இந்த விடயம் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் நிலவும் நிலையில், இந்தப் பதவிப் பிரமாணங்களின் சட்டரீதியான தன்மை தொடர்பாக உயர்நீதிமன்றம் அறிவிக்கவேண்டும்.

அத்துடன், இதன்மூலம் ஜனாதிபதியின் பதவிக்காலம் எதுவரை அமையும் என்பதனை உச்சநீதிமன்றம் தீர்மானிக்க வேண்டும் எனவும் அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### இந்திய...

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில ஹேரத், கடற்படைத் தளபதி தயாசந்தகிரி, ஆகியோரையும் அட்மிரல் மாதவேந்திர சிங் தலைமையிலான இந்தியக் கடற்படை அதிகாரிகள் சந்தித்துப் பேச்சுநடத்துவர்.

அத்துடன் இந்திய - இலங்கை கடற்படை ஒத்துழைப்புக்கள் குறித்து இந்தியக் கடற்படை அதிகாரிகள் குழு, இலங்கைக் கடற்படை உயர்மட்ட அதிகாரிகளுடன் விரிவாக ஆலோசனை நடத்தவுள்ளது என்றும் கடற்படைத் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

### ஜனாதிபதி...

தைகள் குறித்து பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

முன்னர் ஜப்பானிய தூதுவர் யசுசி அகாஷி தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அமைச்சர் ரவூப் ஹக்கீம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

கிளிநொச்சியில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

### மீனவர்கள்...

திருப்பியனுப்பியுள்ளார்கள்.

இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பாக உடனடியாக மீனவ சங்கங்களால் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. இதையடுத்து அவர்கள் பலாலி படைத்தலைமையுடன் தொடர்பு கொண்டதாகவும் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டிருந்த நால்வரையும் இன்று மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதாகவும் படைத்தரப்பு அறிவித்துள்ளது. (222)

## சர்வதேச சமூகத்திடம் முன்வைக்க...

திற்கான தளம், அரசியல் ரீதியான பரிமாணங்களை நாங்கள் எப்போதும் பலவீனப்படுத்த முடியாது. நாங்கள் எப்பொழுதும் தெளிவோடும், உறுதியோடும் எச்சரிக்கையோடும் இந்த சமாதான முயற்சிகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறோம்.

தென்னிலங்கையில் உள்ள அரசியல் சூழ்நிலைகள் நாளுக்குநாள் மாற்றமடைந்து வருகின்றது. அத்தோடு, நெருக்கடி நிலையையும் நோக்கித் தள்ளிக்கொண்டிருக்கிறது.

தமிழ்மக்களுடைய நியாயமான அபிலாஷைகளை, கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு நியாயமான தீர்வை முன்வைக்கின்ற உறுதிப்பாட்டை பெற்றுக்கொண்டு, அதற்காக மக்கள் ஆணையை பெற்றுவருகின்ற தெற்கு அரசியல் தலைமையுடனும் நாங்கள் பேசத்தயாராக இருக்கின்றோம்.

இதேவேளை, தற்பொழுது கூட்டணி அமைத்துள்ள ஜே.வி.பி. - சுதந்திரக் கட்சி ஆகிய கட்சிகள் மக்களுடைய உரிமைப் பேராட்டத்தைக் கொச்சைப்படுத்தி, அதனை மறுதலித்து சமாதானத்தைப்பற்றி பேச முன்வருவார்களானால் அது கேள்விக்குரியதாகத்தான் இருக்கும்.

தமிழ்மக்களுடைய போராட்டம் நியாயத்தன்மையை மறுதலிக்கும். எந்தக்கட்சியுடனும் பேச்சுவார்த்தை நடததுவதில் எந்தப்பயனும் இல்லை. இதனை எங்களுடைய தலைவர் சந்திக்கின்ற இராஜதந்திரிகளிடம் இதனையே வலியுறுத்திவருகின்றார்.

சமாதானத்தின்மீது அர்ப்பணிப்புடன் மக்களின் அபிலாஷைகளை விளங்கிக்கொண்டு அவர்களின் குரலை மதித்துவருகின்றதற்காக மக்களின் ஆணையைப் பெற்றவர்களுடன் பேசத்தயாராக இருக்கின்றனர். இதனைவிடுத்து இனவாதத்தை முன்வைத்துக்கொண்டு தமிழ்மக்களுக்கு எந்தவொரு தீர்வையும் முன்வைக்கமுடியாத அரசியல் தலைமைகளை சிங்கள மக்கள் தெரிவு செய்வார்களாயின், தமிழ்மக்கள் ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்தி இருதரப்பினுடைய இணக்கத்துடன் தீர்வை ஏற்படுத்துவது சாத்தியமில்லாமல் போய்விடும். இந்தநிலையில், தமிழ்மக்கள் தங்களுடைய தலைவிதியை தாங்களே நிர்ணயிக்கின்ற நிலையினை தென்னிலங்கை அரசியல் தள்ளிவிடும் என நாங்கள் நினைக்கின்றோம்.

சிங்களமக்கள் சமாதான வழியில் அமைதியாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசி ஒரு இணக்கமான தீர்வைக்கொண்டுவர வேண்டும் என சிங்கள மக்களுடைய நிலைப்பாடாக இருந்துவந்துள்ளது. இதனை தேர்தல் மூலம் மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

இனவாத சகதிகளைச் சரியாக இனங்கண்டு, அவர்களை நிராகரித்து இலங்கைத்தீவில் மீண்டும் ஒரு அவலத்தால் இரத்தஆறு ஓடாமல் இருப்பது சிங்கள மக்களின் கையில் தான் இருக்கிறது எனத் தெரிவித்தார்.

### உதவி வழங்கும்...

வரை எவ்வளவு நிதியுதவி வழங்கியுள்ளன எங்களது பார்வையும் வருங்காலத்தில் வழங்கப்படும் உதவிகள் பற்றி ஆராய இருப்பதாக ஜப்பானிய தூதரகப் பேச்சாளர் தெரிவித்தார். கடந்த ஆண்டு இலங்கைகக்கு கூடுதலாக 100 கோடி அமெரிக்க டொலரை 3வருட காலப்பகுதியில் வழங்குவதாக ஜப்பான் உறுதியளித்துள்ளது. ஆயினும் சமாதானப் பேச்சுவார்த்தையினை முன்னெடுத்து செல்வதில் தான் உதவி வழங்கப்படுவது தங்கி இருக்கின்றது என்று ஜப்பான் எச்சரித்திருக்கின்றது.

நேற்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் விபரங்கள் பற்றி நாளை அகாஷியால் அறிவிக்கப்படும் என்று ஜப்பானிய பேச்சாளர் தெரிவித்தார்.

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1584 திகதி: 23.01.2004

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| X | 9 | 7 | 9 | 2 | 4 | 6 |

## மரண அறிவித்தல்



### திரு.ஏகாம்பரநாதன் ரவிச்சந்திரகுமார் (ரவி)

மிருசுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை தற்காலிக வதிவிடமாகவும்கொண்ட ஏகாம்பரநாதன் ரவிச்சந்திரகுமார் (ரவி) 16.01.2004 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் ஏகாம்பரநாதன் இராஜேஸ்வரி தம்பதியினரின் மூத்தமகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் லக்சுமிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், வேலுப்பிள்ளை சரஸ்வதிப்பிள்ளை தம்பதியினரின் பேரனும், தயாழினியின் அன்புக் கணவரும், றாகவியின் பாசமிகு தந்தையும், பாலிச்சந்திரகுமார் (வீமன் - போராளி), குகச்சந்திரகுமார் (குகன் - கனடா), சிவச்சந்திரன் - (சிவன் - மிருசுவில்), ராஷ்குமார் (கனடா), றாசினி, றாதிகா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு அண்ணனும், இராசகோபால் (கற்சிலைமடு), துரைராசா (சுவிஸ்), இராசநாயகம் (கனடா), கிளி (ஜேர்மனி), தட்சணாமூர்த்தி (கனடா), சதாசிவமூர்த்தி (சாவகச்சேரி), சிவலோகநாயகி (சுவிஸ்), ரதி (கற்சிலைமடு), ராணி (கனடா), ராணி (ஜேர்மனி) ஆகயோரின் மருமகனும், நர்மதா (பளை), பவானி (சுவிஸ்), கண்ணன் (சுவிஸ்), அருள் (சுவிஸ்), மோகன் (கனடா), பாலன் (கனடா), சிவா (கனடா), ராசன் (பவானி ஸ்ரோர்), உதயன் (பவானி ஸ்ரோர்), சீலன் (கஜமுகா ஸ்ரோர்), தவம் (நீர்வேலி), குளோசி (சுவிஸ்), செல்வி (சுவிஸ்), ஜீவா (கனடா), துவாரகன், மிதினா (கனடா), துரேஷ் (கனடா), துஷ்யந்தன் (மிருசுவில்), காலஞ்சென்ற துவாரகன், லக்கியா, சர்மியா, சத்தியா (கற்சிலைமடு), நவநீதன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், ஆத்மிகா, அபிசாந், விதுசாந், கரிசாந் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் நாகேஸ்வரியின் பெறாமகனுமாவார்.

அன்னாரது ஈமைக்கிரியைகள் 25.01.2004 ஞாயிறு (நாளை) பி.ப.1.00 மணிக்கு அவரது பிறந்தகத்தில் நடைபெற்று மிருசுவில் வடக்கு மயானத்தில் தகனம் செய்யப்படும். இதனை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
வி.ஏகாம்பரநாதன்.
(தந்தை)

மிருசுவில் வடக்கு.
மிருசுவில். (சி-2169)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.